தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### அதிக மகசூல் பெற உயிர் உரங்களை பயன்படுத்த அறிவுரை



இயற்கையான உயிர் உரங்களை பயன்படுத்துவதன் மூலம் இடுபொருளுக்கு ஆகும் செலவைக் குறைத்து மண் வளத்தைப் பெருக்கி அதிக மகசூல் பெறலாம்.

இது குறித்து வேளாண்மை உதவி இயக்குநர் அ.நே.ஆசைத்தம்பி வெளியிட்டுள்ள அறிக்கை: அனைத்து தாவரங்களுக்கும் தழைச்சத்து இன்றியமையாதது. நைட்ரஜன் எனப்படும் தழைச்சத்தில் இருந்துதான் தாவரங்களில் உள்ள புரதங்கள் தயாரிக்கப்படுகின்றன. எனவே, தழைச்சத்தை பெறுவதற்கு நுண்ணுயிர் அடங்கிய உரங்களையோ அல்லது நுண்ணுயிரோடு இயைந்து வாழும் உயிரினங்களையோ உரமாக இட்டு சாகுபடி செலவைக் குறைக்கலாம்.

மணிச்சத்தை மண்ணில் இருந்து செடிகளுக்கு கிடைக்குமாறு செயல்படும் பாஸ்போ பாக்டீரியா மற்றும் வேர் உட்பூசணங்களும் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ரைசோபியம்: உளுந்து, பாசிப்பயறு போன்ற பயறு வகைத் தாவரங்கள், நிலக்கடலை போன்ற பயிர்கள் காற்றில் உள்ள தழைச்சத்தை ரைசோபியட் என்னும் பாக்டீரியாவின் துணை கொண்டு செடிகளில் சேர்க்கின்றன. பயறு வகை பயிர்களின் விதையுடன் ரைசோபியம் உயிர் உரங்களை கலந்து விதைத்தால் வேர் முடிச்சுகள் அதிகரித்து அதிக தழைச்சத்து நிலைநிறுத்தப்பட்டு மகசூல் அதிகரிக்கிறது. சாதாரணமாக 20 கிலோ விதைகளுக்கு 200 கிராம்

ரைசோபியத்தை சோற்றுக்கஞ்சியுடன் கலந்து விதை நேர்த்தி செய்து ஒரு நாள் கழித்து விதைக்க வேண்டும். இப்படி செய்வதன் மூலம் அதிக மகசூல் கிடைக்கிறது. மேலும் 3-ல் ஒரு பங்கு உரத் தேவையும் குறைகிறது.

அசோஸ்பைரில்லம்: அசோஸ்பைரில்லம் என்ற நுண்ணுயிர் பாக்டீரியா நெல், மக்காச்சோளம், கம்பு, பருத்தி, கரும்பு உள்ளிட்ட பயிர்களின் வேர்ப்பகுதிகளில் வளர்ந்து காற்றில் உள்ள தழைச்சத்தை நிலைநிறுத்துகிறது. இதை பயன்படுத்தும்போது ஏக்கருக்கு 10 கிலோ வரை தழைச்சத்து (22 கிலோ யூரியா அளவு) சேர்க்கப்படுகிறது. மேலும் ஜிப்பர்லிக் அமிலம், இன்டோல் அசிட்டிக் அமிலம் போன்ற பயிர் வளர்ச்சி ஊக்கிகளையும் அசோஸ்பைரில்லம் உற்பத்தி செய்வதால் பயிர் நன்கு வளர்ந்து விளைச்சல் அதிகமாகிறது. இதை விதை நேர்த்தி செய்தும், நாற்றின் வேர்ப்பாகத்தில் நனைத்தும் மக்கிய தொழு உரத்துடன் கலந்து மண்ணில் இட்டும் பல வகைகளில் பயன்படுத்தலாம்.

பாஸ்போ பாக்டீரியா: இது மண்ணில் உள்ள மணிச் சத்தை கரைத்து பயிர்களுக்கு வழங்குகிறது. சிலவகை அமிலங்களை இந்த பாக்டீரியா உற்பத்தி செய்து மண்ணிலுள்ள கரையாத பாஸ்பேட்டை கரைத்து செடிகளுக்கு கொடுக்கிறது. இதை பயன்படுத்துவதால் 20 சதவீதம் மணிச்சத்து தரும் ரசாயன உர பயன்பாட்டை குறைக்கலாம். வேர்கள் செழித்து வளரவும், திசுக்கள் வளம் பெற்று கதிர்கள் செழித்து வளரவும், தழைச்சத்தை அதிக அளவு ஈர்க்கவும் பாஸ்போ பாக்டீரியா பயன்படுகிறது.


அசோலா: அசோலா ஒரு பெரணி வகைத் தாவரம் ஆகும். இதில் உள்ள அனபீனா எனப்படும் நுண்ணுயிர், காற்றில் உள்ள தழைச் சத்தை நிலைப்படுத்தி உரமாக அளிக்கிறது. இந்த அசோலாவை நாற்றங்கால்களில் இட்டு உற்பத்தி செய்து ஒவ்வொரு வாரமும் அறுவடை செய்யலாம்.

ஏக்கருக்கு 100 முதல் 250 கிலோ அசோலாவை நெல் நடவு வயலில் பரப்பி விட்டு ஒரு வாரம் தண்ணீர் தேக்கிவைத்து, பின் சேற்றில் மிதித்து விட வேண்டும். இதில் 6 சதவீதம் தழைச்சத்து உள்ளது. வேகமான வளர்ச்சியும், அதிக தழைச்சத்தும் இதன் சிறப்பம்சங்களாகும். ஒரு வாரத்தில் 10 மடங்கு இது பெருகுகிறது. இதன் மூலம் 25 சதவீதம் ரசாயன தழைச்சத்து உரங்களை குறைக்கலாம்.

நீலப்பச்சை பாசி: இதில் உள்ள நைட்ரஜேனஸ் என்ற பொருள் வெளியில் உள்ள நைட்ரஜன் வாயுவை தழைச்சத்து உரமாக ஆக்குகிறது. இந்த வகை பாசியை உழவர்கள் தமது நிலங்களில் நாற்றாங்கால் அமைத்து, விதைத்து 15 நாள்களுக்கு ஒரு முறை அறுவடை செய்யலாம். தொடர்ந்து 4 பருவங்களுக்கு இந்த பாசியை வயலில் இட்டால் தானாக வளர்ந்து பெருகத் தொடங்கி விடும். இதன் மூலம் 25 சதவீதம் ரசாயன உரத்தை சேமிக்கலாம். அதில் தழைச்சத்து மட்டுமின்றி அமினோ அமிலங்கள், வைட்டமின்கள் போன்றவையும் உள்ளன. மேலும் மணிச் சத்தை கரையச் செய்து நெற்பயிருக்கு அளிக்கிறது.

உயிர் உரங்கள் விநியோகம்: உழவர்கள் இந்த உயிர் உரங்களை பரிந்துரைகளின்படி பயன்படுத்தினால் தழை, மணி போன்ற சத்துகள் கொண்ட ரசாயன உரங்களின் தேவையை குறைத்து அதிக மகசூல் பெறலாம். அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இந்த வகை உயிர் உரங்கள் அந்தந்த சாகுபடி பயிர்களின் தேவைக்கேற்ப இருப்பு வைத்து விநியோகிக்கப்படுகிறது. சிலவகை உயிர் உரங்களுக்கு 50 சதவீத மானியமும் வழங்கப்படுகிறது.

## மண் வளத்தை அதிகரிக்க நெல் தரிசில் உளுந்து சாகுபடி



**திருநெல்வேலி,**

பிசான பருவ சாகுபடி அறுவடை நடைபெற்று வரும் இத் தருணத்தில் நெல் தரிசில் உளுந்து பயிரிடுவதன் மூலம் குறுகிய காலத்தில் அதிக மகசூல் பெறுவதுடன் மண்ணின் வளத்தை அதிகரிக்கச் செய்யலாம் என வேளாண்துறை தெரிவித்துள்ளது.

சேரன்மகாதேவி வேளாண் உதவி இயக்குநர் ச. சத்யஜோஸ் வெளியிட்ட செய்திக் குறிப்பு: சேரன்மகாதேவி வட்டாரத்தில் பிசான பருவ சாகுபடி அறுவடை நடைபெற்று வருகிறது. இந்த தருணத்தில் நெல்தரிசில் உளுந்து பயிரிட்டு குறுகிய காலத்தில் அதிக மகசூல் பெறலாம். மேலும் மண்ணின் வளமும் அதிகரிக்கும்.

காற்றில் சுமார் 75 சதவிகித நைட்ரஜன் உள்ளது. உளுந்து, பாசிப்பயிறு போன்ற பயறு வகைப் பயிர்கள், இந்த காற்றில் உள்ள தழைச்சத்தைக் கிரகித்து வளரும் செடிகளுக்கு தருவதுடன் மண்ணின் வளம் காக்க பெரிதும் உதவுகிறது. இந்த பயிறு வகைகள் வேர் முடிச்சுகளின் மூலம் தழைச்சத்தை மண்ணில் நிலை நிறுத்துகிறது.

நமது உடல் வளர்ச்சிக்கும், அறிவாற்றலுக்கும் புரதச்சத்து மிகவும் அவசியமானது. இத்தகைய புரதச்சத்து பயறு வகை பயிரான உளுந்தில் அதிகளவு உள்ளது. நெல் போன்ற தானியப் பயிரைக் காட்டிலும் பயிறு வகைகளில் புரதச்சத்து இரண்டு, மூன்று மடங்கு அதிகமாக உள்ளது. மகசூல் அதிகரிக்கவும், மண்ணில் உள்ள அனைத்து சத்துக்களும் செடிகளுக்கு கிடைக்கவும் பயிர் சுழற்சி மிகவும் முக்கியம். தொடர்ந்து நெற்பயிர் சாகுபடி செய்வதற்குப் பதிலாக நெல் தரிசில் உளுந்து பயிரிடுவதன் மூலம் மண் வளத்தை மேம்படுத்தலாம்.

தமிழகத்தில் உளுந்து, பாசிப்பயிறு போன்ற பயிறு வகைகளின் உற்பத்தி, தேவையை விடக் குறைவாக இருக்கிறது. தமிழகத்தின் தேவையைப் பூர்த்தி செய்ய பிற மாநிலத்தைச் சார்ந்து உள்ளோம். ஆகவே உளுந்து உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. உளுந்து சாகுபடியில் அதிக மகசூல் பெற சரியான விதை அளவும் விதை நேர்த்தியும் மிக முக்கியமாகும்.

ரகமும், விதை நேர்த்தியும்: வம்பன் 3 உளுந்து ரகம் 65 முதல் 70 நாள்கள் வயதுடையது. மஞ்சள் தேமல் நோயை தாங்கி வளரக்கூடியது. ஒரு ஏக்கருக்கு தேவையான 8 கிலோ விதையுடன் ரைசோபியம் ஒரு பொட்டலம் (200 கிராம்) பாஸ்போ பாக்டீரியா (200 கிராம்) ஆகியவற்றை ஆறிய அரிசிக் கஞ்சியுடன் கலந்து விதை நேர்த்தி செய்து நிழலில் உலர்த்தி 24 மணி நேரத்திற்குள் 30 க்கு 10 செ.மீ. இடைவெளியில் விதைப்பு செய்து சதுர மீட்டருக்கு 33 செடிகளைப் பராமரிக்க வேண்டும். இவ்வாறு விதை நேர்த்தி செய்வதால் அதிக முளைப்புத்

திறன், அதிக மகசூல், தழைச்சத்து பூமியில் நிலைநிறுத்தப்படும். மண்ணில் உள்ள மணிச்சத்தைப் பயிர் எடுக்கும் திறன் அதிகரித்தல் போன்ற பயன் கிடைக்கும்.

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரை முடியும் என்ற பழமொழிக்கு ஏற்ப வளமான உயிரோட்டம் உள்ள மண் வளம் இருந்தால்தான் தொடர்ந்து அதிக மகசூல் பெற முடியும். ஆகவே விவசாயிகள் நெல் தரிசில் உளுந்து பயிரிட்டு உளுந்து உற்பத்தியைப் பெருக்குவதுடன் மண்ணின் வளத்தை மேம்படுத்த வேண்டும் என்றார் அவர்.

## குமரிக் கடலில் காற்றழுத்த தாழ்வு நிலை: சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு

**சென்னை,**

குமரிக் கடல் அருகே உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியின் சில இடங்களில் வியாழக்கிழமை (மார்ச் 6) மழை பெய்ய வாய்ப்புள்ளதாக செனனை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. குமரிக் கடல் மற்றும் மாலத்தீவு இடையே செவ்வாய்க்கிழமையன்று குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவானது. இதன் காரணமாக ஸ்ரீவைகுண்டம், அம்பாசமுத்திரம் உள்பட தென் தமிழகத்தின் சில இடங்களில் மழை பெய்தது. இந்த தாழ்வு நிலை வலுவடையும்பட்சத்தில் தமிழகத்தின் பெரும்பாலான இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது. சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் எனவும் வியாழக்கிழமையன்று மழைக்கு வாய்ப்பில்லை எனவும் வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. புதன்கிழமை காலை வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்): ஸ்ரீவைகுண்டம் - 50, அம்பாசமுத்திரம் - 40, கொடைக்கானல், பேச்சிப்பாறை, கோத்தகிரி - 30, குன்னூர் - 20, விருதுநகர் - 10.

## கோமாரி நோய் தடுப்பு முகாம்

**காஞ்சிபுரம்,**

கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பு முகாம் நடத்தப்படுவதாக மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: காஞ்சிபுரம் மாவட்டத்தில் மார்ச் 1 முதல் மார்ச் 21-ஆம் தேதி வரை கால்நடைகளுக்கு 6-வது சுற்றாக கோமாரி நோய் தடுப்பூசி போடப்படுகிறது.

இதற்காக 4 லட்சத்து 42 ஆயிரம் டோஸ் தடுப்பூசி மருந்து வரவழைக்கப்பட்டுள்ளன.

பசு, எருது, எருமைகள் மற்றும் அவைகளின் 4 மாதங்களுக்கு மேலான கன்றுகளுக்கு அந்தந்த ஊராட்சிகளில் முகாம் நடத்தி தடுப்பூசி போடப்படுகிறது.

எனவே, கோமாரி நோய் தடுப்பூசி போட்டு கால்நடைகளைப் பாதுகாத்துக் கொள்ளவும் என்று அவர் அறிவித்துள்ளார்.

## இயற்கை வேளாண்மை விழிப்புணர்வு கருத்தரங்கம்

**உத்தரமேரூர்,**

உத்தரமேரூர் தாலுக்கா காவனூர்-புதுச்சேரி கூட்ரோடு சுப்பையா தோட்டத்தில் புதன்கிழமை இயற்கை வேளாண்மை விழிப்புணர்வு சங்கத்தின் சார்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.

இயற்கை வழி வேளாண்மை நிறுவனர் கண்ணன் ராஜகோபால் தலைமை தாங்கினார். தோட்ட உரிமையாளர் சி.சுப்பையா வரவேற்றார்.

இயற்கை வேளாண்மை விழிப்புணர்வு சங்க செயலாளர் சின்னாளம்பாடி என். ரவி, அமுதகரசன் தயாரிப்பு பற்றியும் பொருளாளர் கொடுர் என்.ரவிந்திரன் பஞ்சகாவிய தயா ரிப்பு, ஏஜென்ட் கோ.தவனகிரி மண்புழு உரம் தயாரித்தல், வானகம் பிரதிநிதி அரியனூர் ஜெயச்சந்திரன் இயற்கையின் நன்மைகள் பற்றியும், இந்திய இயற்கை விவசாயிகள் சங்க பிரதிநிதி வி.பி.முரளி விற்பனை முறைகளை பற்றியும் எடுத்துரைத்தனர்.

உத்தரமேரூர் வட்டார உழவர்கள் சங்கத் தலைவர் அ.தனஞ்செழியன் துணைத் தலைவர் க.நிர்மல்குமார். செயற்குழு உறுப்பினர்கள் மு.பரசுராமன், சி.இராமசாமி, கி.சக்திவேல், அ.அண்ணாதுரை, ஒன்றிய அமைப்பாளர் மா.நாகராஜ், துணைச்செயலாளர் கே.சண்முகம், பொருளாளர் தணிகைமலை உட்பட பலர்

கலந்துகொண்டனர். முடிவில் இயற்கை வேளாண்மை விழிப்புணர்வு சங்கத் தலைவர் சோழனூர் மா.ஏழுமலை நன்றி கூறினார்.

**ரூ.18 லட்சத்துக்கு தேங்காய் பருப்பு ஏலம்**

**வெள்ளக்கோவில்,**

வெள்ளக்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஏலத்தில் ரூ.18 லட்சத்து 22 ஆயிரத்துக்கு தேங்காய் பருப்பு விற்பனையானது. விலை கட்டுபடியாகவில்லையெனத் தெரிவித்து, உள்ளூர் மற்றும் பிற மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் கொண்டு வந்திருந்த மொத்தம் 642 மூட்டைகளில், 180 மூட்டைகளை விற்பனை செய்யாமல் விவசாயிகள் நிறுத்தி வைத்தனர். மீதமிருந்த 462 மூட்டைகளில் 23 ஆயிரத்து 218 கிலோ மட்டும் விற்பனை செய்யப்பட்டது. அதிக பட்ச விலை கிலோ ரூ.87.35, குறைந்தபட்ச விலை ரூ.56. வரும் வாரங்களில் விலையும், வரத்தும் சீராக இருக்குமென விற்பனைக் கூட வட்டாரங்கள் தெரிவித்தன.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 46 அடி**

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை 46 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,038 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 100 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 3.5 டி.எம்.சி.

**கால்நடைகளுக்கான இலவச மருத்துவ முகாம்**

**மொடக்குறிச்சி,**

அவல்பூந்துறையை அடுத்த சின்னதிருமங்கலம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் ஈரோடு மாவட்ட ஆவின் சார்பில் கால்நடைகளுக்கான இலவச மருத்துவ முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

சின்னதிருமங்கலம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத் தலைவர் சிவக்குமார் தலைமை தாங்கினார். நவரசம் கல்லூரி தலைவர் தாமோதரன், நவரசம் பள்ளி தலைவர் பழனிச்சாமி, பூலக்காடு மாணிக்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அவல்பூந்துறை பேரூராட்சி தலைவர் கதிர்வேல் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக ஈரோடு மாவட்ட ஆவின் தலைவர் பி.சி.ராமசாமி கலந்து கொண்டு முகாமை துவக்கி வைத்து, சங்க உறுப்பினர்களுக்கு தாது உப்பு பொட்டலங்களை வழங்கினார். அவர் பேசியது:

தேவையான சத்துகள் இல்லாமல் பெருமளவு கால்நடைகள் இறந்து விடுகின்றன. தற்போது தமிழக அரசு கால்நடைத் துறை மூலமாக அதிக பால் உற்பத்தி, ஆரோக்கியம் மற்றும் உடல்வலிமைக்கு தேவையான தாது உப்புகளை மானிய விலையில் வழங்குகிறது. பெரிய கால்நடைகளுக்கு தினமும் 50 கிராம் முதல் 100 கிராம் வழங்கினால் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கும். பால் உற்பத்தி அதிகரிக்கும். கன்றுகளுக்கு 25 கிராம் வழங்கவேண்டும்.

சங்க உறுப்பினர்களுக்கு ரூ.55 மதிப்புள்ள தாதுக் கலவை உப்பு மானிய விலையில் ரூ.25க்கு வழங்கப்படுகிறது என்றார்.

சங்கத்தின் கால்நடை மருத்துவர்கள் சுரேஷ், அனிஷ் நடராஜ் ஆகியோர் 75 கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர்.

முகாம் ஏற்பாடுகளை சங்க விரிவாக்க அலுவலர்கள் வரதராஜன், கிருஷ்ணன், சங்க செயலாளர் கந்தசாமி, பரிசோதகர் பழனி ஆகியோர் செய்திருந்தனர்.

சின்னதிருமங்கலம் பால் கூட்டுறவு சங்க துணைத் தலைவர் மோகன்குமார் நன்றி கூறினார்.

**விலையில்லா ஆடுகள் பராமரிப்புத் தொகை**

**வாணியம்பாடி,**

ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம் பெத்தவேப்பட்டு ஊராட்சியில் விலையில்லா ஆடுகளை பராமரிப்பதற்கான காசோலைகளை வழங்கும் நிகழ்ச்சி புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஊராட்சி மன்றத் தலைவர் கணேசன் தலைமை வகித்தார். தமிழக அரசின் சார்பில் தலா 4 விலையில்லா ஆடுகளை பெற்ற 51 பெண் பயனாளிகளுக்கு அவற்றை பராமரிப்பதற்கான அரசு வழங்கும் தொகையாக தலா ரூ.2150 வீதம் மொத்தம் ரூபாய் 1 லட்சத்து 9,650 ரூபாய்க்கான காசோலைகளை எம்எல்ஏ சம்பத்குமார் வழங்கினார் .

நிகழ்ச்சியில் ஒன்றியக் குழுத் தலைவர் எம்.கோபால், துணைத் தலைவர் அண்ணாசாமி, ஒன்றிய கவுன்சிலர்கள் மணி, பாரதிதாசன், கோவிந்தசாமி, ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் கண்ணையன், கால்நடை மருத்துவர் விஸ்வநாதன், ஊர் தலைவர் சென்றாயன், அதிமுக நிர்வாகிகள் குமார், மணி, வடிவேல், முருகேஷ், டி.பழனி, சேகர், எம்.பழனி, கோவிந்தசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கரும்புகளை ஆந்திரத்துக்கு அனுப்ப அனுமதிக்க வேண்டும்**

**திருவண்ணாமலை,**

திருவண்ணாமலை தாலுகா பகுதியில் விளையும் கரும்புகளை ஆந்திர மாநிலத்துக்கு அனுப்ப மாவட்ட நிர்வாகம் அனுமதி வழங்க வேண்டும் என்று குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

விவசாயிகள் குறைதீர் கூட்டம் திருவண்ணாமலை வட்டாட்சியர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு, கோட்டாட்சியர் முத்துக்குமாரசாமி தலைமை வகித்தார்.

கூட்டத்தில் கோரிக்கைகள் குறித்து விவசாயிகள் பேசியதாவது:

கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.2,650 வழங்க வேண்டும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. ஆனால், திருவண்ணாமலை மாவட்ட தனியார் சர்க்கரை ஆலைகளில் ஒரு டன் கரும்புக்கு ரூ.2,250 மட்டுமே தருகிறார்கள்.

இவ்விஷயத்தில் மாவட்ட நிர்வாகம் தலையிட்டு தனியார் சர்க்கரை ஆலைகள் ஒரு டன் கரும்புக்கு ரூ.2,650 வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால், திருவண்ணாமலை தாலுகா பகுதியில் விளையும் கரும்புகளை வெட்டி ஆந்திர மாநிலத்துக்கு அனுப்ப விவசாயிகளுக்கு மாவட்ட நிர்வாகம் அனுமதி வழங்க

வேண்டும். திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் மழை பொய்த்து விட்டது. ஆண்டு முழுவதும் வெறும் 30 சதவீதம் தான் மழை பெய்துள்ளது. எனவே, திருவண்ணாமலை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்றனர். வட்டாட்சியர் வேடியப்பன், வட்ட வழங்கல் அலுவலர் சுரேஷ், தலைமை நில அளவர் சண்முகம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கோமாரி நோய் தடுப்பு சிறப்பு மருத்துவ முகாம்**

**ஊத்தங்கரை,**

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரையில் கோமாரி நோய் தடுப்பு சிறப்பு முகாம் புதன்கிழமை நடைப்பெற்றது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு தமிழகம் முழுவதும் கோமாரி நோயால் கால்நடைகள் பாதிக்கப்பட்டு இறந்தன. இதையடுத்து, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கோமாரி நோயைக் கட்டுப்படுத்தும் வகையில், மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் பேரில் சிறப்பு முகாம்கள் அமைக்கப்பட்டு தடுப்பூசிகள் போடும் பணி நடைபெற்று வருகிறது. இது வரை 5 சுற்றுகள் தடுப்பூசி போடப்பட்ட நிலையில், 6-ஆவது சுற்றாக ஊத்தங்கரை அடுத்த வண்டிக்காரன் கொட்டாய் கிராமத்தில் சிறப்பு முகாம் நடைப்பெற்றது.

இந்த முகாமில் சுமார் 300-க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டன. இதில், கால்நடை மருத்துவர் பிரபு, கால்நடை ஆய்வாளர் சுரேஷ், கால்நடை உதவியாளர் உமாராணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**சொட்டுநீர், தெளிப்புநீர் பாசனம் அமைக்க இலவசப் பயிற்சி**

**நாமக்கல்,**

சொட்டுநீர், தெளிப்புநீர் பாசனம் அமைத்தல், பராமரித்தல் குறித்த இலவசப் பயிற்சி முகாம் நாமக்கல்லில் செவ்வாய்க்கிழமை (மார்ச் 11) நடைபெற உள்ளது.

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் அன்று காலை 9 மணிக்கு நடைபெற உள்ள இந்தப் பயிற்சியில், சொட்டுநீர்ப் பாசனத்தின் முக்கியத்துவம், நன்மைகள்,

பயிருக்கு ஏற்றவாறு நீர்ப் பரிசோதனை, சொட்டுநீர், தெளிப்பு நீர்ப்பாசனம் அமைக்கும் முறைகள், நீர், உரமிடும் கால அளவுகள், உப்பு படிதலை நீக்கும் வழிமுறைகள், பராமரிக்கும் வழிமுறைகள், வேளாண், தோட்டக்கலைப் பயிர்களில் சொட்டுநீர்ப்பாசனத்தின் வெற்றிக் கதைகள், சொட்டுநீர், தெளிப்புநீர்ப்பாசனம் அமைப்பதற்கான செலவுகள் குறித்து செயல்விளக்கத்துடன் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இதில், விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் பங்கேற்கலாம்.

விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் - மோகனூர் சாலையிலுள்ள வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரிலோ, தொலைபேசி மூலமாகவோ திங்கள்கிழமைக்குள் பெயர் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு 04286-266345, 266244, 266650 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு பெறலாம் என வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் பா.மோகன் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரூ. 5.5 கோடியில் கீழ்போக்கி அணை அமைக்கும் பணி தொடக்கம்

**அரியலூர்,**

அரியலூர் அருகே மருதையாற்றின் குறுக்கே முட்டுவாஞ்சேரி கிராமத்தில் ரூ. 5.5 கோடியில் கீழ்போக்கி அணை அமைக்கும் பணி தொடங்கியது.

அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஒன்றியம், முட்டுவாஞ்சேரி கிராமத்தில் ஆங்கிலேயர் காலத்தில் கீழ்போக்கி அணை கட்டப்பட்டது. கொள்ளிடம், பொன்னாறு, மருதையாறு ஆகிய 3 ஆறுகளும் பிரிந்து செல்வதற்கு வசதியாக இந்த கீழ்போக்கி அணை கட்டப்பட்டது. இந்த அணை கட்டப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டதால், அணையின் தரம் குறைந்து பலவீனமானது. மேலும், மழைக் காலங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு வெள்ளம் ஊருக்குள் புகும் அபாயம் ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து, அந்தப் பகுதியில் புதிய அணை கட்ட வேண்டும் என்று பொதுமக்கள் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்தனர். இதையடுத்து, மருதையாற்றின் குறுக்கே பொன்னாறு பிரதான வாய்க்கால் கீழ்போக்கி அணை கட்டுவதற்கு ரூ. 5.5 கோடி ஒதுக்கப்பட்டது. இந்த அணை கட்டுமானப் பணி தொடக்க விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் பொதுப்பணித் துறை கண்காணிப்புப் பொறியாளர் ஜேம்ஸ் லூர்துசாமி பங்கேற்று பணியை தொடக்கி வைத்தார். அரியலூர் மருதையாறு வடிநில கோட்டச் செயற்பொறியாளர் சீனிவாசன், ஜயங்கொண்டம் வடிநில கோட்ட உபக்கோட்ட உதவிச் செயற்பொறியாளர் ராஜேந்திரன், மதனத்தூர் உதவிப் பொறியாளர் வேதமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர். நிகழ்ச்சியின் போது, பொதுப்பணித் துறை அதிகாரிகள் கூறியது:

மருதையாற்றின் குறுக்கே கட்டப்படும் கீழ்போக்கி அணையின் மூலம் தா.பழூர் ஒன்றியத்தில் உள்ள 25 கிராமங்களில் 1,694 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். மேலும், வெள்ளக் காலங்களில் மழைநீர் ஊருக்குள் புகாமல் தடுக்கும் விதமாக பக்கவாட்டு சுவர், இறக்கை சுவர்கள் பலப்படுத்தப்பட உள்ளன என்றனர்.

## மார்ச் 21 வரைகோமாரி நோய் தடுப்பூசி முகாம்

**கரூர்,**

கரூர் மாவட்டத்தில் கால்நடைகளைத் தாக்கும் கோமாரி நோயைத் தடுக்க மார்ச் 21-ம் தேதி வரை அனைத்து கிராமங்களிலும் இலவச தடுப்பூசி முகாம் நடைபெற உள்ளது. இந்த வாய்ப்பை கால்நடை வளர்ப்போர் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என கரூர் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத் தலைவர் ந. அகிலா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## ஆண்டாங்கோவில் கிராமத்தில் விவசாயிகளுக்கு தோட்டக் கலை பயிற்சி

**கரூர்,**

கரூர் மாவட்டம், தாந்தோணி வட்டார தோட்டக் கலைத் துறை சார்பில், ஆண்டாங்கோவில் கிராமத்தில் விவசாயிகளுக்கு நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் தொழில்நுட்பப் பயிற்சி அண்மையில் வழங்கப்பட்டது.

பயிற்சியை வட்டார தோட்டக் கலை உதவி இயக்குநர் லூா. சொர்ணமாணிக்கம் தொடக்கிவைத்தார்.

இதில், புழுதேரி சரஸ்வதி வேளாண் அறிவியல் நிலையத்தின் தொழில்நுட்ப வல்லுநர் கவியரசு, தோட்டக்கலை பயிர்களில் மூடாக்கு அமைத்தலின் முக்கியத்துவம், அதனால் ஏற்படும் நன்மைகள் குறித்து விளக்கினார்.

தோட்டக் கலை அலுவலர் நடராஜன், தோட்டக் கலை பயிர்கள் பாதுகாப்பு குறித்து பேசினார்.

தோட்டக்கலை அலுவலர் பேபி, மஞ்சள், மரவள்ளி பயிர் சாகுபடி தொழில்நுட்பம் குறித்து பேசினார்.

ஏற்பாடுகளை வட்டார தோட்டக் கலை உதவி வேளாண்மை அலுவலர்கள் கல்யாணசுந்தரம், பாலசுப்ரமணியன், லெனின் ஆகியோர் செய்திருந்தனர்.

**கோமாரி நோய் தடுப்பு முகாம்**

**ஆலங்குடி,**

ஆலங்குடியில் கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

ஆலங்குடி ஆண்டிகுளம், படேல்நகர், அம்பேத்கர்நகர் உள்ளிட்ட பகுதிகளில் இம்முகாம் நடைபெற்றது. முகாமை ஆலங்குடி பேரூராட்சித் தலைவர் ஏ.டி. மணமோகன் தொடங்கி வைத்தார்.

இதில், 250 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

கால்நடை மருத்துவர் திருவளர்ச்செல்வி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**களியக்காவிளையில் பலத்த மழை**

**களியக்காவிளை,**

களியக்காவிளை சுற்றுவட்டாரப் பகுதியில் புதன்கிழமை பலத்த மழை பெய்தது. இப்பகுதியில் கடந்த சில நாள்களாக கோடை வெப்பம் அதிகமாக இருந்தது. ஞாயிற்றுக்கிழமை மாலையில் லேசான மழை பெய்தது. தொடர்ந்து,

கடந்த இரு நாள்களாக பகலில் வெயிலின் தாக்கம் இருந்தது. இந்நிலையில் புதன்கிழமை பகலிலும் வெப்பம் அதிகமாக இருந்தது.

மாலையில் வானம் மேகமூட்டமாக காணப்பட்டது. தொடர்ந்து, மாலை 5.15 மணிக்கு பலத்த மழை பெய்தது.

களியக்காவிளை சுற்றுவட்டாரப் பகுதிகளான படந்தாலுமூடு, கேரள பகுதியான பாறசாலை, இடிச்சக்கப்பிலாமூடு, பரசுவைக்கல் மற்றும் அதையொட்டிய பகுதிகளிலும் பலத்த மழை பெய்தது.

இந்த திடீர் மழையால் இப்பகுதிகளில் வெப்பம் தணிந்து, குளிர்ச்சி நிலவியது.

**விதை கிராம திட்டப் பயிற்சி முகாம்**

**விழுப்புரம்,**

விழுப்புரம் மாவட்டம், தழுதாளி கிராமத்தில் விதை கிராம திட்டப் பயிற்சி முகாம் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு கள்ளகொளத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவர் தயாளன் தலைமை வகித்தார்.

ஊராட்சி மன்றத் தலைவர் முருகன், துணைத் தலைவர் செல்லப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றியக் கவுன்சிலர் முருகன் வரவேற்றார்.

விவசாய தொழில்நுட்பங்கள் குறித்து வேளாண்மை உதவி இயக்குநர் ஆறுமுகம் பேசினார்.

வேளாண்மை அலுவலர் சுமதி, உதவி வேளாண்மை அலுவலர்கள் பூவிழி, சுதா, முன்னோடி விவசாயிகள் செல்வமணி, அபரஞ்சி, ஜானகிராமன் உள்பட பலர் பங்கேற்றனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### காபி விலை அதிகரிப்பு

**போடி**: கேரளாவில் நெடுங்கண்டம், பூப்பாறை, தேனி மாவட்டத்தில் குரங்கணி, முட்டம் உள்ளிட்ட பகுதிகளில் 30 ஆயிரம் ஏக்கருக்கு மேல் காபி பயிரிடப்பட்டுள்ளது.

செப்டம்பர் முதல் ஜனவரி வரை காபி சீசனுக்கு ஏற்ற காலம். இந்த ஆண்டு மழை பொய்த்து விட்டதால், காபி விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் பிரேசில் நாட்டில் பெய்த கனமழை, பனிப் பொழிவால், காபிபயிர்கள் அழிந்ததோடு, விளைச்சல் பாதிக்கப்பட்டது. இதனால், கடந்த நாட்களுக்கு முன்பு வரை கிலோ ரூ. 60-80 விற்ற காபி உருளை தற்போது ரூ.80-?00 வரையும், ரூ.65-80 விற்ற ரோபர்ட்சா (கொட்டை) 90-110 வரையும், ரூ.120-135 விற்ற அரபி தளர் 190-200 வரை விலை உயர்ந்துள்ளது.

### சிறுதானியம் பயிரிட விவசாயிகளுக்கு ஆலோசனை

**திருத்தணி**: சிறுதானியம், சொட்டுநீர் பாசனத்திற்கு, அரசு வழங்கும் மானியம் பெற வேண்டும் என, விவசாயி களுக்கு வேளாண் துறை சார்பில், விழிப்புணர்வு கூட்டம் நடத்தி ஆலோசனை வழங்கப்பட்டது.

திருத்தணி வேளாண் விரிவாக்க அலுவலகத்தில், ஒன்றிய விவசாயிகளின் ஆலோசனை கூட்டம், நேற்று நடந்தது. இதில், வேளாண் பொறியியல் துறை, தோட்டக்கலை மற்றும் கால்நடை துறை ஆகிய உதவி இயக்குனர்கள், தங்களது, துறைகளில் உள்ள திட்டங்கள், அதை விவசாயிகள் எவ்வாறு பெறுவது என்பது குறித்தும் விளக்கினர். தொடர்ந்து, வேளாண் துறை உதவி இயக்குனர் பிரசாத் கூறுகையில், ""அட்மா (ஆத்மா) திட்டத்தின் கீழ், சோளம், கம்பு, கேழ்வரகு போன்ற சிறுதானியங்கள் பயிரிட, விவசாயிகள் முன்வர வேண்டும். இதற்கு, அரசு மானியம் வழங்குகிறது. அதே போல், தென்னை, கரும்பு ஆகிய பயிர்களுக்கு, சொட்டு நீர் பாசனத்தை பயன்படுத்த வேண்டும். இதற்கும், அரசு குறிப்பிட்ட

தொகை மானியம் வழங்குகிறது," என்றார். மேலும், ""இதுதவிர மரக்கன்றுகள் நடவேண்டும். சூரியசக்தி மூலம் இயங்கும் மின்மோட்டார்கள் விரைவில், மானிய விலையில் வழங்கவுள்ளது. இதை விவசாயிகள் வாங்கி பயன்படுத்த வேண்டும்" என்றார். கூட்டத்தில், திருத்தணி ஒன்றியத்தில் இருந்து, 70க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## வேளாண் வணிகத் துறை மூலம் மானியத்தில் குளிரூட்டும் இயந்திரம்

**சிதம்பரம்** : வேளாண்மை வணிகம் மற்றும் விற்பனைத் துறை மூலம் விவசாய வியாபாரிகள் மற்றும் தொழில் செய்வோருக்கு 50 சதவீதம் மானிய விலையில் குளிரூட்டும் இயந்திரம் வழங்கப்படுகிறது. அரசு வேளாண்மை வணிகம் மற்றும் விற்பனைத்துறை உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்யுமிடத்திலிருந்து நுகர்வோர் வரை பாதுகாக்க தேவைப்படும் உட்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டம் காய்கறி சாகுபடியாளர்கள், பால் மற்றும் மீன், இறால் தொழில்களில் ஈடுபடுபவர்களுக்கு வேளாண்மை வணிகம் மற்றும் விற்பனைத்துறை மூலம் தொடர் குளிரூட்டும் இயந்திரம் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது.

தனியார்கள், தொழில் முனைவோர், கூட்டுறவு சங்கங்கள், சுயஉதவிக் குழுக்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், பொது நிறுவனங்கள் உள்ளிட்டவர்கள் இந்த திட்டத்திற்கு தகுதியானவர்கள். இந்த திட்டத்தில் தோட்டக்கலைப் பயிர்கள், பால் மற்றும் பால் பொருட்கள், மீன், இறால், இறைச்சி தொழில்கள், வயல் மட்ட அளவில் சிறிய அளவிலான பதப்படுத்தும் மையங்கள், நடமாடும் முன் குளிரூட்டும் சரக்கு வண்டிகள், பகிர்மான மையங்கள், கதிர்வீச்சு வசதிகள், மதிப்பு கூட்டு மையங்கள் போன்றவைக்கு மானியம் வழங்கப்படும்.

இந்த திட்டத்தில் கருவிகள் மற்றும் தளவாடங்கள் மற்றும் தொழில்நுட்ப கட்டுமான தொகையில் 50 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூபாய் 10 கோடி வரை மானியமாக வழங்கப்படும். இந்த திட்டத்தில் சிதம்பரம் வட்டாரப் பகுதியில் உள்ள விவசாயிகள், தொழில் செய்வோருக்கு மானியம் வழங்கப்படும். இந்த திட்டத்தில் பயன்பெற விரும்புவோர் மானியத்தில் குளிரூட்டும் இயந்திரம் பெற தேவையான ஆவணங்கள் குறித்து அறிய வட்டார வேளாண் வணிக அலுவலர்

மற்றும் உதவி வேளாண் வணிக அலுவலரை தொடர்பு கொள்ளலாம் என சிதம்பரம் வேளாண் வணிக உதவி இயக்குனர் சித்ரா தெரிவித்துள்ளார்.

### 'தக்காளி சாகுபடிக்கு நுண்ணீர் பாசனம் அமைக்க மானியம்'

உடுமலை : 'உடுமலை பகுதியில் தக்காளி சாகுபடி செய்ய, தோட்டக்கலைத்துறை சார்பில், உதவி வழங்கப்படும்,' என, உடுமலை வட்டார தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் இளங்கோவன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: உடுமலையில் கல்லாபுரம் மற்றும் எலையமுத்துார் பகுதிகளில் தக்காளி சாகுபடிக்கு ஏற்ற சூழ்நிலை உள்ளது. இப்பகுதியில் தக்காளி சாகுபடி செய்ய விரும்பும் பயனாளிகளுக்கு நுண்ணீர்ப் பாசனம் அமைக்க 75 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. 50 சதவீத மானியத்தில், பாலித்தீன் ஷீட் மல்ச்சிங் முறை மூலம் நாற்றுக்களை நட்டு களைத் தாக்குதலை தடுக்கவும் வழி உள்ளது. குறைந்த நீர்த் தேவையில் அதிக மகசூல் பெற லாம். ஒரு பயனாளிக்கு 1.25 ஏக்கர் பரப்புக்கான விதை, உரம், பயிர் பாதுகாப்பு மருந்து இலவசமாக வழங்கும் நிலவள நீர்வளத் திட்டத்தில், கல்லாபுரம் மற்றும் எலையமுத்துாரில் ஏராளமான விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர்.
அமராவதி பாசன பகுதி சாகுபடியா ளர்கள் சிட்டா, அடங்கல், 3 போட்டோ, ரேஷன் கார்டு, கிராம நிர்வாக அலுவலர் சான்றுடன் தோட்டக்கலைத் துறையை அணுகி, நிலவள நீர்வள திட்டத்தின் மூலம் ரூ.7,500 மதிப்பிலான இடுபொருட்களை இலவசமாக பெற்று பயனடையலாம்.இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 1.3 கோடிக்கு பருத்தி வர்த்தகம்

**அவிநாசி** : அவிநாசி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று நடந்த பருத்தி ஏலத்துக்கு, 7,000 மூட்டைகள் வரத்தாக இருந்தன. டி.சி.எச்., ரூ.5,500 முதல் 6,250 வரை, ஆர்.சி.எச்., - பி.டி., மற்றும் பென்னி ரகங்கள் தலா ரூ.4,800 முதல் 5,250 வரை, மட்டம் ரூ.2,000 முதல் 2,900 வரை விலைக்கு போனது. ரூ.1.30 கோடிக்கு வர்த்தகம் நடந்தது.

## மண்புழுவில் உரம் தயாரிக்கும் முயற்சி

**கூடலூர்** : கூடலூர் கவுண்டங்கொல்லி ஆதிவாசி மக்கள், மண்புழு மூலம் உரம் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

கூடலூரில் இயற்கையை சார்ந்து வாழும் ஆதிவாசி மக்கள், பெரும்பாலும், தங்கள் விவசாய பயிர்களுக்கு இயற்கையாக கிடைக்கும் இலைகளை பயன்படுத்தி வருகின்றனர். ரசாயன உரங்களை பயன்படுத்துவதில்லை. விவசாயத்துக்கு தேவையான இயற்கை உரங்களை அவர்களே உற்பத்தி செய்து பயன்படுத்தும் வகையில், சி.டி.ஆர்.டி., அறக்கட்டளை சார்பில், முதல் முறையாக, கூடலூர் கவுண்டங்கொல்லி ஆதிவாசி கிராமத்தில் வீடுகளில் மண்புழு உரம் தயாரிக்கும் முயற்சியை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அங்குள்ள 35 வீடுகளில், தனியார் நிறுவனத்தின் தன்னார்வலர்கள் மூலம் தனித் தனியாக மண் புழு உற்பத்தி தொட்டிகள் கட்டப்பட்டு, தென்னங் கீற்று மூலம் மேற்கூரை அமைத்துள்ளனர். தொடர்ந்து, மண் புழு உரம் தயாரிப்பு குறித்து அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.இதனை தொடர்ந்து தற்போது, தொட்டிகளில் மண் புழு உரம் தயாரிக்கும் பணியை ஆதிவாசிகள் துவங்கி உள்ளனர்.

இதற்கான ஒவ்வொரு தொட்டிகளிலும் 1.5 கிலோ மண்புழுக்கள் பயன்படுத்தப்பட்டு உள்ளன. இதில் கிடைக்கும் இயற்கை உரத்தை தங்கள் பயன்பாட்டுக்கு போக, மீதமுள்ளதை உரத்தை விற்பனை செய்யவும் முடிவு செய்யப்பட்டுள்ளது இதற்கான முயற்சியில்இறங்கி உள்ள, சி.டி.ஆர்.டி., அறக்கட்டளை நிர்வாக இயக்குனர் ரெங்கநாதன் கூறுகையில்,""ஆதிவாசி மக்கள் மத்தியில் இயற்கை விவசாயத்தை ஊக்கப்படுத்தும் வகையில், முதல்கட்டமாக கவுண்டகொல்லி ஆதிவாசிகளுக்கு மண் உரம் உற்பத்தியை துவங்கப்பட்டுள்ளது. இதன் வெற்றியை தொடர்ந்து மற்ற ஆதிவாசி கிராமங்களிலும் இப்பணிகள் துவங்கப்படும்," என்றார்.

## தென்னை உற்பத்தி நிறுவனம் துவக்கம் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க முடிவு

**திண்டுக்கல்** : தென்னை உற்பத்தியாளர் கூட்டமைப்பு சார்பில் புதிய நிறுவனங்களை உருவாக்குவதற்காக, விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது.

தொடர் வறட்சியினால் தென்னை விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை ஊக்குவிப்பதற்காக தென்னை மரங்களின் நண்பர்கள் என்ற அமைப்பினை டாக்டர் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் துவக்கியுள்ளது. கொச்சியில் உள்ள இந்திய தென்னை வளர்ச்சி வாரியத்தினரோடு ஒப்பந்தம் செய்துள்ள இந்த நிறுவனம், மாவட்டத்தில் தென்னை உற்பத்தியாளர் கூட்டமைப்பு நிறுவனங்களை புதிதாக துவங்க முடிவு செய்துள்ளது.

இதற்காக அனைத்து பகுதிகளில் உள்ள தென்னை விவசாயிகளை ஒருங்கிணைத்து அவர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. தென்னையில் ஏறுவதற்காக ரூ. 4 ஆயிரம் மதிப்பிலான கருவிகள் 40 விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை மாவட்டத்தில் 20 பேரை உறுப்பினர்களாக கொண்ட பத்து குழுக்களை உருவாக்கியுள்ளனர். இந்த கூட்டமைப்பின் மூலம் புதிய உற்பத்தியாளர் நிறுவனங்களை விரைவில் துவங்க திட்டமிட்டுள்ளனர்.

ஆராய்ச்சி நிறுவனத்தின் தகவல் தொழில் நுட்ப வல்லுநர் ஆனந்த் கூறியதாவது: வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க இந்திய வேளாண் காப்பீடு கழகம் முன்வந்துள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் ஆத்தூர், நிலக்கோட்டை, கோபால்பட்டி உட்பட பல்வேறு பகுதிகளை சேர்ந்த ஆயிரக்கணக்கான தென்னை விவசாயிகள், உறுப்பினர்களாக உள்ளனர். புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்தி, தென்னை விவசாயத்தை மேம்படுத்துவதற்காக பல்வேறு பயிற்சிகளை அளித்து வருகிறோம், என்றார்.

### வாழை, வெங்காயத்தில் 50 சதவீதம் பிரிமியத்தில் காப்பீடு செய்ய அழைப்பு

**தேனி** : வாழை, வெங்காயத்திற்கு, 50 சதவீதம் பிரிமியம் செலுத்தி காப்பீடு செய்யும் திட்டத்தில் சேர, விவசாயிகள் முன்வர வேண்டும், என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய விவசாய காப்பீட்டு திட்டத்தில், இயற்கை சீற்றங்களால் பாதிப்பு ஏற்படும் போதும், பூச்சி மற்றும் நோயினால் பயிருக்கு சேதம் ஏற்படும் விவசாயிகளுக்கு, காப்பீடு மற்றும் நிதி உதவி வழங்குவதற்கு அரசு ஒதுக்கீடு கிடைத்துள்ளது. இதன் மூலம் வாழை, வெங்காயம் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு, 50 சதவீதம் பிரிமியம் செலுத்தப்படுகிறது.

தேசிய காப்பீடு திட்டத்தில், கடன் பெறாத விவசாயிகளுக்கு 50 சதவீதம் பிரிமியம் செலுத்துவதற்காக, 7 லட்சத்து 11 ஆயிரம் ரூபாய் நிதி பெறப்பட்டுள்ளது. பருவநிலை சார்ந்த பயிர் காப்பீட்டு திட்டத்தில், 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி பெறப்பட்டுள்ளது.

கடன் பெறும் சிறு, குறு, இதர விவசாயிகளுக்கு, ஒரு ஏக்கர் வாழைக்கு 4 லட்சத்து 99 ஆயிரத்து 244 ரூபாய் காப்பீட்டு தொகை பெற, 50 சதவீதம் பிரிமியமாக 19,470 ரூபாய் செலுத்த வேண்டும்.

கடன் பெறாத விவசாயிகள் 45 சதவீதம் பிரிமியமாக 17, 523 ரூபாய் செலுத்த வேண்டும். வெங்காயத்திற்கு ஏக்கருக்கு 43 ஆயிரத்து 708 ரூபாய் காப்பீடு பெற, 50 சதவீதம் பிரிமியமாக 1639 ரூபாய் செலுத்த வேண்டும். கடன் பெறாத சிறு, குறு விவசாயிகள் 45 சதவீதம் பிரிமியமாக 1475 ரூபாய் செலுத்த வேண்டும். நடவு செய்த அல்லது விதைத்த ஒரு மாதத்திற்குள் வாழை, வெங்காயத்திற்கு இந்த பிரிமியத் தொகையை செலுத்த வேண்டும்.

இத்திட்டங்களில் சேர்ந்து விவசாயிகள் பயனடைய வேண்டும். கூடுதல் விவரங்களை அறிய, விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

## சாரல் மழையால் பலனில்லை மானாவாரி விவசாயிகள் கருத்து

**கம்பம்** : கடந்த சில நாட்களாக, பெய்து வரும் சாரல் மழையால் பலனில்லை, என்று மானாவாரி விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கூடலூரில் ஆரம்பித்து கம்பம், புதுப்பட்டி, உத்தமபாளையம், கோம்பை, பண்ணைப்புரம், தேவாரம் பகுதிகளில், மானாவாரி காடுகள் உள்ளன. இங்கு மொச்சை சாகுபடி சீசன் தற்போது முடிவிற்கு வந்துள்ளது. இந்நிலையில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது.

ஆனால் இந்த மழையால் எந்த பலனும் இல்லை, என மானாவாரி விவசாயிகள் கருத்து தெரிவித்துள்ளனர். முன்னோடி மானாவாரி விவசாயி ராசு கூறியதாவது : பெய்த மழை போதவில்லை. எனவே உழவு செய்ய முடியவில்லை. மழை இன்னும் சற்று கூடுதலாக கிடைத்தால், உழவு செய்வதற்கு ஏதுவாக இருக்கும். அவ்வாறு மழை பெய்யும் பட்சத்தில் எள்ளு, மொச்சை, சூரியகாந்தி, தட்டை பயறு

போன்ற பயிர்கள் சாகுபடி செய்ய திட்டமிட்டுள்ளோம். ஆனால் மழை ஏமாற்றி வருகிறது' என்றார்.

## போதிய மழை இல்லாததால் ஏலக்காய் மகசூல் பாதிப்பு

**கம்பம்** : போதிய மழை இல்லாததால், இந்த ஆண்டு ஏலத்தோட்டங்களில் மகசூல் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கேரளா,இடுக்கி மாவட்டத்தில் பீர்மேடு, உடும்பன்சோலை, தேவிகுளம் தாலுகாக்களில் ஏலக்காய் சாகுபடி செய்யப்படுகிறது. 1.5 லட்சம் ஏக்கரில் சாகுபடி செய்யப்படுகிறது.அதிக பரப்பில் ஏலக்காய் சாகுபடி செய்வதால், இந்த மூன்று தாலுகாக்களை, மத்திய அரசு "கார்டமம் ரிசர்வ்' என்று அறிவித்துள்ளது. ஏலக்காய்க்கு மிதமான மழை அவசியம். அதிக மழை பெய்தாலும் அழுகல் ஏற்படும்.

கடந்த பல மாதங்களாக, மழைபெய்யவில்லை. அத்தோடு கடுமையான பனிப்பொழிவால், ஏலச்செடிகள் கருகி வந்தன.மேலும், பகல் நேரங்களில் கடும் வெப்பம் நிலவுகிறது. ஏலத்தோட்டங்களில் கிணறுகளில் உள்ள தண்ணீரை பயன்படுத்தி, செடிகளை காப்பாற்றி வந்தனர். தற்போது, தொடர்ந்து மழை பெய்யாததால், கிணறுகள் வற்றிப் போகும் நிலை ஏற்பட்டுள்ளது. இன்னும் சில வாரங்களுக்கு மட்டுமே, தாங்கும் நிலை உள்ளது. அதன் பிறகு செடிகள் காயத் துவங்கிவிடும். ஏலத்தோட்ட சாகுபடி ஆலோசகர் அன்பழகன் கூறியதாவது:

கடந்த நவம்பர் மாதத்திற்கு பிறகு மழை இல்லை. ஏலச்செடிகளுக்கு, தோட்ட கிணறுகளில் உள்ள தண்ணீரை வைத்து சமாளித்து வருகின்றனர். அதுவும் பெரும்பாலான தோட்டங்களில் தண்ணீர் குறைந்து வருகிறது. மழை பெய்யும் என்று நம்பிக்கையுடன் உள்ளனர். மழை பெய்யாவிட்டால், செடிகளை காப்பாற்றுவது கடினம். மகசூல் குறையும், என்றார்.

## சிவகங்கையில் திடீர் மழை

சிவகங்கை : சிவகங்கையில்,நேற்று திடீரென மழை பெய்தது. மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளாக மழையின்றி, நிலத்தடி நீர்மட்டம் கடுமையாக

பாதிக்கப்பட்டுள்ளது. குடிநீர் பிரச்னை ஒரு சில பகுதிகளில் இருந்தாலும், மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இருப்பினும், சில நாட்களாக, சிவகங்கை மாவட்டத்தில் வெப்பத்தின் தாக்கம் அதிகமாக காணப்பட்டது. இந்நிலையில், நேற்று காலை மேகமூட்டம் காணப்பட்டது. காலை 12 மணிக்கு மேல்,சிவகங்கை நகரில், திடீரென மழை பெய்ய துவங்கியது. 15 நிமிடம் மட்டுமே பெய்த மழையால், உஷ்ணத்தின் தாக்கம் அதிகரித்தது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**இயற்கை வேளாண்மை விழிப்புணர்வு சங்க கருத்தரங்கம்**

**உத்திரமேரூர்,**: உத்திரமேரூர் தாலுகா காவனூர் புதுச்சேரி கூட்ரோடு சுப்பையா தோட்டத்தில் இயற்கை வேளாண்மை விழிப்புணர்வு சங்கத்தின் சார்பில் கருத்தரங்கம் நேற்று நடந்தது. இயற்கை வழி வேளாண்மை நிறுவனர் கண்ணன் ராஜகோபால் தலைமை தாங்கினார். தோட்ட உரிமையாளர் சி.சுப்பையா வரவேற்றார்.

இயற்கை வேளாண்மை விழிப்புணர்வு சங்க செயலாளர் சின்னாளம்பாடி என்.ரவி, அமுதகரசன் ஆகியோர் தயாரிப்பு, பொருளாளர் கொடூர் என்.ரவீந்திரன் பஞ்ச காவிய தயாரிப்பு, ஏஜென்ட் கோ.தவனகிரி மண்புழு உரம் தயாரித்தல், வானக பிரதிநிதி அரியனூர் ஜெயச்சந்திரன் இயற்கையின் நன்மைகள், இந்திய இயற்கை விவசாயிகள் சங்க பிரதிநிதி வி.பி.முரளி விற்பனை முறைகளை பற்றியும் எடுத்துரைத்தனர்.உத்திரமேரூர் வட்டார உழவர்கள் சங்கதலைவர் அ.தனஞ்செழியன், துணை தலைவர் க.நிர்மல்குமார். செயற்குழு உறுப்பினர்கள் மு.பரசுராமன், சி.ராமசாமி, கி.சக்திவேல், அ.அண்ணாதுரை, ஒன்றிய அமைப்பாளர் மா.நாகராஜ், துணை செயலாளர் கே.சண்முகம், பொருளாளர் தணிகைமலை உட்பட பலர் கலந்துகொண்டனர். இயற்கை வேளாண்மை விழிப்புணர்வு சங்க தலைவர் சோழனூர் மா.ஏழுமலை நன்றி கூறினார்.

**சிறுதானிய உற்பத்தி இலவச பயிற்சி**

**கோவை,** : தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்ள சிறுதானியங்கள் துறை சார்பில் சிறுதானியங்களில் உற்பத்தி மற்றும் மதிப்பு கூட்டுதலுக்கான பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இப்பயிற்சி வரும் மார்ச் 10, 11 ஆகிய இரண்டு தினங்கள் நடத்தப்படுகிறது. இப்பயிற்சியில் சிறு தானியங்களின் உற்பத்தி திறனை பெருக்குவதற்கான தொழில்நுட்பங்கள் மற்றும் சிறு தானியங்களில் மதிப்பு கூட்டுதலுக்கான தொழில் நுட்பங்கள் போன்ற பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில் சிறு தானியங்கள் பயிரிடுவோர் மற்றும் மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கும் அளிக்கப்பட உள்ளது. இப்பயிற்சியில் கலந்து கொள்ள கட்டணம் செலுத்த தேவையில்லை.இப்பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக சிறுதானியங்கள் துறை பேராசிரியர் அல்லது துறை தலைவரை அணுகவும், அல்லது 0422-2450507 என்ற எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம்.

**கீழ்பவானி பாசனத்திற்கு நீலகிரி மின் அணைகளில் இருந்து நீர்திறக்க விவசாயிகள் வலியுறுத்தல்**

**கோபி, :** கீழ்பவானி பாசன திட்டத்தில் 2ம் முறை பாசனத்திற்கு நீலகிரி மாவட்டத்தில் உள்ள மின் அணைகளில் இருந்து தண்ணீர் வழங்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கோபி நல்லகவுண்டன்பாளையத்தில், கீழ்பவானி முறைநீர் பாசன விவசாயிகள் சபை யு-4 கோட்ட விவசாயிகள் கூட்டம் நடந்தது. தலைவர் ராம சாமி தலைமை தாங்கினார். செயலாளர் ராஜூ வரவேற்றார்.

இதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: கீழ்பவானி பாசன திட்டத்தில் இரண்டாம் முறை பாசன நிலங்களுக்கு பவானிசாகர் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் உள்ள மின்அணைகளில் இருந்து தண்ணீர் வழங்க வேண்டும், கீழ்பவானி பாசனதிட்டத்தில் பாசன பகுதி மேன்மை திட்டம் மூலம் கொப்பு வாய்க்கால் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கொப்பு வாய்க்கால் சீரமைக்கும் போது ஆக்கிரமிப்பு அகற்றி எல்லை கற்கள் நடப்பட்டு திறந்த வெளி கான்கிரீட் வாய்க் கால் அல்லது குழாய் அமைத்து தர

வேண்டும், பிரதான வாய்க்காலின் வலது கரையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும், இயற்கை வேளாண்மை விஞ்ஞானி நம்மாழ்வார் மறைவுக்கு அஞ்சலி செலுத்துவது ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.கூட்டத்தில் பொருளாளர் சுந்தரேசன், உழவர் உற்பத்தியாளர் சங்க தலைவர் நல்லசாமி, தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் செங்கோட்டையன், பாசன சங்க நிர்வாகிகள் பெருமாள், சங்கிலிதுறை, கீழ்பவானி முறைநீர் பாசன விவசாயிகள் கூட்டமைப்பு இணை செயலாளர் பாமா.வெங்கடாசலபதி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### கோமாரி நோய் தடுக்க 1 லட்சம் கால்நடைகளுக்கு 5 நாளில் தடுப்பூசி

**ஈரோடு,** : ஈரோடு மாவட்டத்தில் கடந்த ஐந்து நாட்களில் 1 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கோமாரி நோய் தாக்குதலினால் ஆயிரக்கணக்கான கால்நடைகள் இறந்ததையடுத்து தற்போது மாநிலம் முழுவதும் தடுப்பூசிகள் போடப்பட்டு வருகின்றது. கடந்த 1ம் தேதியில் இருந்து தொடங்கி நடைபெற்று வரும் தடுப்பூசிகள் போடும் பணி, தொடர்ச்சியாக 21 நாட்களுக்கு நடைபெற உள்ளது. ஈரோடு மாவட்டத்தில் 3 லட்சத்து 66 ஆயிரத்து 290 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட உள்ளது.

இப்பணிக்காக கால்நடை உதவி மருத்துவர்கள் தலைமையில் 132 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. தினந்தோறும் சராசரியாக 18 ஆயிரத்து 500 கால்நடைகளுக்கு தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன்படி, கடந்த 5 நாட்களில் மட்டும் 1 லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளதாகவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதற்கு முன்பாகவே அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசிகள் போடும் பணி நிறைவடைந்துவிடும் என்று கால்நடைத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### அப்பிபாளையத்தில் திசு வாழை சாகுபடியை விவசாயிகள் பார்வை

**கரூர்,** : தாந்தோணி வட்டாரத்தில் தோட்டக்கலைத்துறை சார்பில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின்கீழ் 50 விவசாயிகளுக்கு பயிற்சி

அளிக்கப்பட்டது. வட்டார தோட்டக்கலைஉதவி இயக்குனர் சொர்ணமாணிக்கம் துவக்கி வைத்தார். கரூர் உழவர் பயிற்சி நிலைய மேலாண்மை துணை இயக்குனர் மதனகோபால், தோட்டக்கலை பயிரில் நீர்மேலாண்மை, நீர்சேமிப்பு, உத்திகள் பற்றி விரிவான விளக்கம் அளித்தார்.

புழுதேரி சரஸ்வதி வேளாண் அறிவியல் நிலைய தொழில்நுட்ப வல்லுனர் கவியரசு, தோட்டக்கலை பயிர்களில் குழித்தட்டுமுறையில் நாற்றங்கால் அமைத்தல், அதனால் ஏற்படும் நன்மைகள் பற்றி விவசாயிகளுக்கு விளக்கினார். ஜெயின் நிறுவன பிரதிநிதி ராமநாதன் சொட்டுநீர் பாசனத்தில் பராமரிப்பு, சொட்டுநீர் பாசன முக்கியத்துவம் குறித்து விவசாயிகளின் கேள்விகளுக்கு பதில்அளித்தார். அப்பிபாளையம் பகுதியில் பயரிடப்பட்டுள்ள திசுவாழை சாகுபடியை பார்வையிட்டு, திசு வாழை சாகுபடி செய்துள்ள விவசாயி சுப்புராயனிடம் இருந்து உரியவழிமுறைகள் பற்றி தெளிவாக விவசாயிகள் தெரிந்து கொண்டனர். ஏற்பாடுகளை தாந்தோணி வட்டார தோட்டக்கலை உதவிவேளாண்மை அலுவலர்கள் கல்யாணசுந்தரம், பாலசுப்பிரமணியன், லெனின் செய்திருந்தனர்.

## தோகைமலையில் காய்கறி உற்பத்தியை அதிகரிப்பது எப்படி? விவசாயிகளுக்கு பயிற்சி

**தோகைமலை,** : காய்கறி உற்பத்தியை அதிகரிப்பது எப்படி? என்பது குறித்து தோகைமலை விவசாயிகளுக்கு ஒன்றியக்குழு அலுவலகத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் 100 விவசாயிகள் கலந்து கொண்டனர். கரூர் மாவட்டம் தோகைமலை பகுதி விவசாயிகளுக்கு காய்கறி உற்பத்தியை அதிகரிக்க தோட்டக்கலைதுறை சார்பில் ஒன்றிய அலுவலக பயிற்சி கூடத்தில் பயிற்சி நடைபெற்றது. பயிற்சிக்கு ஒன்றியகுழுத் தலைவர் சந்திரசேகர் தலைமை வகித்தார். பயிற்சிக்கு மாவட்ட கவுன்சிலர் விஜயன், வேளாண்மை உதவி இயக்குனர் சண்முகம், தளிஞ்சி ஊராட்சி மன்ற தலைவர் கண்ணையன், ஒன்றிய கவுன்சிலர்கள் மாரியப்பன், முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வரவேற்று பேசிய தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் ராஜேந்திரன், விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறை மூலம் அரசு வழங்கும் மானிய திட்டங்களை விளக்கினார்.

இப்பயிற்சியில் புழுதேரி சரஸ்வதி வேளாண் அறிவியல் மைய தோட்டகலை தொழில் நுட்ப அலுவலர் கவியரசு, உழவியல் தொழில் நுட்ப அலுவலர் முருகன் ஆகியோர் கலந்து கொண்டு காய்கறி உற்பத்தியை அதிகரிக்கும் புதிய தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கி கூறினர். இதில் குழித்தட்டு நாற்று உற்பத்தி, துல்லிய பண்ணையம் அமைத்தல், காய்கறி சாகுபடி, பழ மரங்கள் சாகுபடி, உழவியல் தொழில் நுட்பம் மூலம் பயிர் பாதுகாப்பு எப்படி என பல்வேறு முறைகளை விளக்கினர்.

மேலும், சொட்டுநீர் பாசன கருவிகளின் பயன்பாடு மற்றும் பராமரிப்பு முறைகளை நாகர்ஜுனா சொட்டு நீர் பாசன நிறுவன கள அலுவலர் மருதுபாண்டி செயல்விளக்கம் அளித்தார். வயல்வெளி பயணமாக பாதிரிப்பட்டியில் சொட்டுநீர் பாசன முறையில் சாகுபடி செய்துள்ள மா, சப்போட்டா வயல்களை விவசாயிகள் பார்வையிட்டு அனுபவ கருத்துகளை பகிர்ந்து கொண்டனர். தோட்டக்கலை துறை அலுவலர் சாகுல் இப்ரான்அலி, வேளாண்மை துறை அலுவலர்கள் மற்றும் தோகைமலை, தளிஞ்சி, பாதிரிப்பட்டி, பொருந்தலூர், நாகனூர், கழுகூர், கள்ளை, கல்லடை போன்ற ஊராட்சிகளிலிருந்து 100க்கும் மேற்ப்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**கரூர் மாவட்டத்தில் 100 எக்டேரில் பாமாயில் மர சாகுபடி செய்ய நடவடிக்கை வேளாண் அதிகாரி தகவல் வேளாண் அதிகாரி தகவல்**

**கரூர்,** : கரூர் மாவட்டத்தில் 100 எக்டேர் பரப்பில் பாமாயில் மர சாகுபடி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது வேளாண் அதிகாரிகள் தெரிவித்தனர். கரூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 652.7மிமீ,. நடப்பாண்டில் 25சதம் மழை குறைவாகவே பெய்துள்ளது. வடகிழக்கு பருவ மழையால் வளர்ச்சி பருவத்தில் உள்ள மானாவாரி பயிர்களான சோளம், துவரை, நல்ல நிலையில் உள்ளது. சம்பா பருவ நெல் 12,260 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு பயிர்கள் வளர்ச்சி நிலையில் உள்ளன. காரீப் பருவத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள சூரியகாந்தி பயிரில் 1028 டன், எள்பயிரில் 1764 டன் மகசூல் கிடைக்கப் பெற்றுள்ளது.

எண்ணை வித்துப்பயிரில் பாமாயில் மர சாகுபடியை அதிக அளவில் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பல மடங்கு அதிக எண்ணை மகசூல்

தரக்கூடிய எண்ணெய்பனை (பாமாயில் மரம்) சாகுபடி செய்வதற்கு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. கரூர் மாவட்டத்தில் 2013-14ம் ஆண்டிற்கு தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ் ரூ.55.28 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு எண்ணெய்பனை 100 ஹெக்டேர் பரப்பில் சாகுபடி செய்ய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எண்ணெய்பனை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தேவையான கன்றுகள் விநியோகம் செய்ய மானியம் எக்டேருக்கு ரூ.10ஆயிரம், நடவு மானியம் ரூ.6ஆயிரம் அளிக்கப்படுகிறது. 2ம் ஆண்டு பராமரிப்பு மானியமாக 37எக்டேருக்கு ரூ.1.29லட்சம் நிதி பெறப்பட்டுள்ளது. 3ம்ஆண்டு பராமரிப்பு மானியமாக 46எக்டேருக்கு ரூ.2லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எண்ணை பனை சாகுபடி செய்ய உள்ள விவசாயிகளின் வயல்களுக்கு சொட்டுநீர் பாசனம் 100 எக்டேர் பரப்புக்கு ரூ.7.5 லட்சம் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த உரம், பூச்சி நோய் நிர்வாகம், பாதுகாப்பிற்கு 100 எக்டேருக்கு ரூ.5லட்சம் 2ம் ஆண்டுக்கு 37எக்டேருக்கும். 3ம்ஆண்டுக்கு 46எக்டேருக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

எண்ணெய்பனை தோட்டத்தில் மண்புழு உரம் தயாரிக்க குடில் அமைக்கும் விவசாயிகளுக்கு 8 எக்டேருக்கு ரூ.15ஆயிரம் வீதம், நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள் ளது. 6 எண்கள் ஆழ்குழாய் கிணறு அமைக்க ரூ.50ஆயிரம் வீதம் ரூ.3லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எண்ணெய்பனை சாகுபடி செய்து பயன்பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை உதவி இயக்குனர்களை நேரில் தொடர்புகொண்டு பயன்பெறலாம் என வேளாண் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மாடுகளுக்கு இலவச மலடு நீக்க மருத்துவ சிகிச்சை முகாம்

**க.பரமத்தி,** : சின்னதாராபுரம் கால்நடை மருந்தகம் சார்பில் புளியம்பட்டியில் இலவச மலடு நீக்க மருத்துவ சிகிச்சை முகாம் நடைபெற்றது. முகாமிற்கு ஊராட்சி தலைவர் கலையரசி முன்னிலை வகித்தார். சின்னதாராபுரம் கால்நடை மருத்துவர் மோகன்ராஜ் தலைமை வகித்து பேசியதாவது: க.பரமத்தி ஒன்றியத்தில் போதிய மழை இல்லாததால் கால்நடை வளர்ப்பதையே விவசாயி கள் தொழிலாக செய்து வருகின்றனர். மாடுகள் கன்று ஈன்ற பிறகு மூன்று முறை பருவநிலைக்கு வந்து சினை ஊசி போட்டும் அல்லது காளையுடன் சேர்த்து விட்ட

பின்பும் சினை பிடிக்காமல் இருந்தால் அவை மலட்டுதன்மை மாடுகளாகும். இதனால் விவசாயிகளுக்கு பொருளாதார இழப்பு ஏற்படுவதுடன் பால் உற்பத்தி குறையவாய்ப்பு உள்ளது.

எனவே பாதிக்கப்பட்ட கால்நடைகளை அருகேயுள்ள அரசு கால்நடை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று மருத்துவரின் உரிய ஆலோசனையை பின்பற்ற வேண்டும். பெரும்பாலும் மாடுகளுக்கு தாது உப்புசத்து பற்றாக்குறையால் சினை தாமதமாகிறது. எனவே இதற்கு அரசு கால்நடை மருந்தகங்களை தொடர்பு கொண்டு அங்கு குறைபாடுள்ள கால்நடைகளுக்கு வழங்கப்படும் தாதுஉப்பு கலவையை மருத்துவரின் ஆலோசனைபடி அன்றா டம் ஒரு மாதத்திற்கு மாடுகளுக்கு வழங்குவதன் மூலம் மலட்டுதன்மையை எளிதில் நீக்கலாம் என்று தெரிவித்தார்.

மருத்துவகுழுவினர் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம், தடுப்பூசி, சினைபரிசோதனை உள்ளிட்ட சிகிச்சைகள் அளித்தனர். இதில் சிறந்த கலப்பின கன்றுகளு க்கு பரிசு வழங்கப்பட்டன.

## உதயநத்தம் ஊராட்சியில் கோமாரி நோய் தடுப்பு முகாமில் 396 மாடுகளுக்கு சிகிச்சை

**அரியலூர்,** : உதயநத்தம் ஊராட்சியில் நடைபெற்ற கோமாரி நோய் தடுப்பு முகாமில் 396 மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

அரியலூர் மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் கோமாரி நோய் தடுப்பு முகாம் நடைபெறும் என்று கலெக்டர் சரவணவேல்ராஜ் சில தினங்களுக்கு முன்பு தெரிவித்திருந்தார். இதைத்தொடர்ந்து அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஒன்றியம் உதயநத்தம் ஊராட்சியில் கோமாரி நோய் தடுப்பு முகாம் நேற்று நடைபெற்றது. ஊராட்சி தலைவர் சின்னத்துரை தலைமை வகித்து தொடங்கி வைத்தார். வடவார்தலைப்பு கால்நடை டாக்டர் அறிவுச்செல்வன் தலைமையில் மருத்துவ குழுவினர் சிகிச்சை அளித்தனர். முகாமில் 243 பசுக்கள், 8 காளைகள், 24 எருதுகள், 36 எருமைகள், 85 கன்றுகள் என 396 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. கால்நடை பராமரிப்பு உதவியாளர் மகாலெட்சுமி,

ஊராட்சி செயலாளர் இளங்கோவன் மற்றும் வார்டு உறுப்பினர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## விவசாயிகள் மேம்பாட்டு சங்கக் கூட்டம்

**புதுக்கோட்டை,** : புதுக்கோட்டை மாவட்ட கட்சி சார்பற்ற விவசாயிகள் மேம்பாட்டு சங்க கூட்டம் மாவட்ட தலைவர் சிவசாமி தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட செயலாளர் அப்பாவுபாலாண்டார், பொருளாளர் செங்கோல், அமைப்பு செயலாளர் ராமதீர்த்தார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய பொறுப்பாளர் நடராசன், துரைராசு, கோவிந்தராசு, கணேஷ், முருகேசன், சேகர், ஆரோக்கியசாமி, ரமேஷ் உள்ளிட்ட விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர். கூட்டத்தில் விவசாயிகள் வங்கிகளில் வாங்கியுள்ள கடன்கள் அனைத்தையும் ரத்து செய்து, நகைகளை ஏலம் விடுவதை தடுத்து நிறுத்த வேண்டும். வறட்சி தொடர்ந்து இருப்பதால் ஆழ்துளை கிணறு வெட்ட வங்கிகள் விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுத்து கடன் வழங்கிட வேண்டும். கொள்ளிடம் உபரிநீர் மாவட்டம் முழுவதும் கிடைக்க உடனடியாக போர்க்கால அடிப்படையில் திட்டத்தை நிறைவேற்றிட வேண்டும். இயற்கை காடுகளை மீண்டும் உருவாக்கிட வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## நகரப்பட்டியில் பயறு வகை பெருக்க திட்ட பயிற்சி முகாம்

**பொன்னமராவதி,** : பொன்னமராவதி அருகே உள்ள நகரப்பட்டியில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் மூலம் பயறுவகை பெருக்கதிட்ட பயிற்சி முகாம் மற்றும் பிரச்சார ஊர்தி தொடக்க விழா நடந்தது.

வேளாண் உதவி இயக்குநர் ஜெயபாலன் வரவேற்றார். புதுக்கோட்டை வேளாண் துணை இயக்குநர் (மத்திய திட்டம்) சதானந்தம் தலைமை வகித்து பயிற்சி முகாமையும், பிரசார ஊர்தியையும் தொடக்கி வைத்து பேசுகையில், தமிழகம் முழுவதும் உணவு தானிய உற்பத்தியை பெருக்குவதற்காக வேளாண்மைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் மூலம் நெல் , பயறுவகை பயிர்கள் மற்றும் சிறுதானிய பயிர்களின்

உற்பத்தியை 2 மடங்காகவும், விவசாயிகளின் வருமானத்தை 3 மடங்காகவும் உயர்த்துவற்காக இதுபோன்ற பயிற்சி முகாம்களும், பிரசார ஊர்திகளும் நடத்தப்படுவதாககூறி குறைந்த நீர் செலவு மற்றும் குறைவான சாகுபடி செலவினையும் கடைபிடித்து அதிக மகசூல் தரக்கூடிய பயறுவகை பயிர்களின் சாகுபடி பரப்பை அதிகப்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்து விளக்கி பேசி விவசாயிகளுக்கு இடுபொருட்களையும் வழங்கினார்.

இப்பயிற்சி முகாமின் நோக்கம் மற்றும் பயறுவகை பயிர்களில் டிஏபி கரைசல் தெளிக்கும் முறைகள் மற்றும் வேளாண் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து வேளாண் அலுவலர் ரமேஷ் விளக்கமளித்தார். இப்பயிற்சி முகாமில் ஊராட்சித்தலைவர் பழனியம்மாள் சின்னையா, உதவி வேளாண் அலுவலர்கள் அருளானந்தம், குமாரசாமி நகரப்பட்டி மற்றும் கல்லம்பட்டி கிராம விவசாயிகள் கலந்துகொண்டனர். உதவி வேளாண் அலுவலர் மணிமுத்து நன்றி கூறினார்.

## ஆலங்குடியில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

**ஆலங்குடி,** : ஆலங்குடியில் கோமாரிநோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. ஆலங்குடி ஆண்டிகுளம், படேல்நகர், அம்பேத்கர் நகர், சந்தைப்பேட்டை, சிவன்கோயில் அருகில் இம்முகாம்கள் நடந்தன. முகாமைத் துவக்கி வைத்து பேரூராட்சித் தலைவர் மனமோகன் பேசுகையில், கால்நடைகளுக்கு நோய்ப் பாதிப்பு வருவது கிராமப் புறங்களில் மட்டும்தான் என்று அலட்சியமாக இருந்துவிடக் கூடாது. கிராமப் புறங்களில்தான் பலவிதமான பசுந்தீவனங்களும் கிடைக்கும். அதனால் நோய்த் தொற்று குறைவாக இருக்கும். ஆனால் நகர்ப் புறங்களில் விரைவில் நோய்த் தொற்று ஏற்பட்டு விடும். சமீபத்தில் ஆலங்குடியைச் சுற்றியுள்ள பல கிராமங்களில் நோய்த் தொற்றும் கோமாரி நோயும் வந்து நிறையப் பாதிப்புகளை ஏற்படுத்தி விட்டது.

நோய் வரும் முன் தடுக்கும் விதமாக அரசும், மாவட்ட நிர்வாகமும் தற்போது கால்நடைத்துறையை முடுக்கிவிட்டுள்ளது. நோய் வந்த பிறகு பார்த்துக் கொள்வதை விட வரும் காத்துக் கொண்டால் எந்தப் பாதிப்பும் இல்லாமல் இருக்க முடியும். எனவே பொதுமக்கள் மருத்துவக் குழுவினருக்கு ஒத்துழைப்புக் கொடுத்து அனைத்து மாடுகள் கன்றுகளுக்கும் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும்

என்றார். மருத்துவ உதவியாளர் ஆனந்தன் நன்றி கூறினார். இம்முகாமில் மருத்துவர் திருவளர்ச்செல்வி தலைமையிலான மருத்துவக் குழுவினர் கால்நடைகளுக்கு ஊசி போட்டு தடுப்பு மருந்துகளும் அளித்தனர்.

**மக்காச்சோள பயிரை தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்தும் முறை விவசாயிகளுக்கு யோசனை**

**சேதுபாவாசத்திரம்,** : மக்காச்சோள பயிரை தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்தும் வழிமுறை குறித்து விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கை:

மக்காச்சோள பயிரை தாக்கும் பூச்சிகளில் மிக முக்கமானது தண்டு துளைப்பான், கதிர் துளைப்பான் மற்றும் வேர் கருகல் நூற்புழு ஆகும். தண்டு துளைப்பான் தாக்கிய பயிர்களில் இலைகள் சுரண்டப்பட்டிருக்கும், நடுக்குருத்து வாடி காய்ந்து இருக்கும். தண்டில் துவாரம் காணப்படும். இவற்றை கட்டுப்படுத்த விதைத்த 16வது நாள் குயினல்பாஸ்.5ஜி 6 கிலோ அல்லது கார்பரில்.4ஜி 8 கிலோ குருணை மருந்தை 20 கிலோ மணலுடன் கலந்து ஒரு ஏக்கர் பரப்பில் உள்ள செடியின் நடுக்குருத்தில் இட வேண்டும். குருணை இட தவறும்பட்சத்தில் விதைத்த 20வது நாள் குயினல்பாஸ்25 இ.சி 400 மில்லி அல்லது கார்பரில் 50 சத நனையும் தூள் 400 கிராம் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கரில் தெளிக்க வேண்டும்.

தண்டு துளைப்பான் மட்டுமின்றி மூக்குவண்டு மற்றும் அசுவினி பூச்சிகளும் கட்டுப்படுகிறது. வேர்கருகல் நூற்புழு தாக்கினால் இளம்செடிகள் கருகி காய்ந்துவிடும். இதை கட்டுப்படுத்த கார்போபியூரான்.3ஜி குருணை மருந்து 12 கிலோவை ஒரு ஏக்கர் பரப்பில் நடவு குழியில் விதையுடன் இட வேண்டும். கதிர் துளைப்பான் தாக்குதலால் பால் பருவமணிகள் சேதமடைந்திருக்கும். இதை கட்டுப்படுத்த கார்பரில் 10 சத மருந்து 10 கிலோ அல்லது கார்பரில் 50 சத நனையும் தூள் மருந்து 400 கிராம் இவற்றில் ஏதேனும் ஒன்றை பூக்கும் தருணத்தில் ஒரு முறையும் பின்பு 15 நாட்கள் கழித்து ஒரு முறையும் ஒரு ஏக்கர் பரப்பில் தெளிக்க வேண்டும்.

இதுபோன்று செயல்பட்டால் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். இவ்வாறு சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி தெரிவித்துள்ளார்.

### கோபால்பட்டி பகுதியில் மா விவசாயம் பாதிப்பு

**கோபால்பட்டி,** : கோபால்பட்டி பகுதிகளில் மா பூக்கள் சரியாக பூக்காததால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

சாணார்பட்டி பகுதிகளில் உள்ள வேம்பார் பட்டி, அஞ்சுகுழிப்பட்டி, தவசி மடை உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்களில் மா மரம் வளர்க்கப்பட்டுவருகிறது. இங்கு விளையும் மாம்பழங்கள், தமிழகம் மட்டுமன்றி, வெளிநாடுகளுக்கும், வெளிமாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இங்கு அரிய வகைகளான அல்போன்சா, பங்கனபள்ளி, இமாம்பசந்த், மல் கோவா, காசா, கள்ளாமை உள்ளிட்ட ரகங்கள் அதிகளவில் விளைகின்றன. இந்நிலையில் மாமரங்கள் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி கடைசியில் பூக்கள் பூக்கும். ஆனால் கடந்த மூன்று ஆண்டுகளாக இப்பகுதியில் போதிய மழையில்லாததாலும் காற்றின் ஈரத்தன்மை குறைந்ததாலும் இந்தாண்டு குறிப்பிட்ட மாமரங்கள் மட்டுமே பூக்கள் பூத்துள்ளன. மேலும் பாதிக்கும் மேற்பட்ட மாமரங்களில் பூக்கள் பூக்காததால் இந்தாண்டு மா விளைச்சல் பாதிக்கும் அபாயம் உள்ளது.

இதுகுறித்து வேம்பார்பட்டியைச் சேர்ந்த மா தென்னை விவசாய சங்கத் தலைவர் கண்ணுமுகமது கூறுகையில், கடந்த 3 ஆண்டுகளாக சரியாக மழையில்லாததால் கடும் வறட்சி நிலவுகிறது. இதனால் இந்த ஆண்டு மா பூக்கள் சரிவர பூக்கவில்லை. விவசாயிகளுக்கு இதனால் பல லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது என்றார்.

### விவசாயிகளுக்கு மானியத்தில் சொட்டுநீர் பாசனம்

**கமுதி,** : கமுதி வட்டாரத்தில் விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசனம் அமைக்க மானியம் வழங்கப்படுகிறது என தோட்டக்கலை துறை உதவி இயக்குநர்

ஆறுமுகம் அறிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது: ராமநாதபுரம் மாவட்டம் கமுதி வட்டாரத்தில் கடந்த 2 ஆண்டுகளாக போதிய அளவு பருவமழை பெய்யவில்லை. இதனால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து விட்டது. கிணறுகள், ஆழ்துளை கிணறுகள் தண்ணீர் இல்லாமல் வறண்டு விட்டன. இந்த மாதிரி யான வறட்சியான நிலையில், கிடைக்கும் நீரை வைத்து, பயிர் சாகுபடியை வளம் பெற செய்ய, சொட்டுநீர் பாசன முறை கை கொடுக்கிறது.

கமுதி வட்டாரத்தில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு தற்போது 100 சதவீத மானியத்திலும், மற்ற விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்திலும் சொட்டுநீர் பாசனம் அமைத்து கொடுக்கப்படுகிறது. மிளாகாய், காய்கறிகள், பழ மரக்கன்றுகளை பயிர் செய்யும் விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறை மூலம் சொட்டுநீர் பாசனம் அமைத்து கொடுக்கப்படுகிறது.

சொட்டுநீர் பாசனம் அமைக்க விரும்பும் விவசாயிகள் தோட்டகலை துறையினரை உரிய ஆவணங்களுடன் அணுகலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தென்னை விவசாயிகளுக்கு வேளாண் விஞ்ஞானிகள் ஆலோசனை

**ராமநாதபுரம்,** : தென்னை பராமரிப்பு குறித்து விவசாயிகளுக்கு வேளாண் விஞ்ஞானிகள் ஆலோசனை வழங்கினர்.

உச்சிப்புளி அருகே பெருங்குளத்தில் தென்னை விவசாயிகள் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக விஞ்ஞானிகள் பங்கேற்ற கலந்துரையாடல் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார். அட்மா திட்ட துணை இயக்குனர் சேக் அப்துல்லா வரவேற்றார்.

கூட்டத்தில் வேப்பங்குளம் தென்னை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் ராஜமாணிக்கம் பேசுகையில், “தென்னை சாகுபடி மூலம் நல்ல வருவாய் ஈட்டலாம். தென்னைகளை பராமரிப்பதில் வேளாண் துறை அலுவலர்களின் ஆலோசனைகளை அறிந்து செயல்படுவதன் மூலம் காய்ப்பு திறன் கூடும்.

சொட்டுநீர் பாசன முறையில் தென்னை சாகுபடி செய்யலாம்" என்றார். வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் துக்கையண்ணன், சரவணன், ராம்குமார், ராஜப்பா உட்பட பலர் பேசினர். தென்னை மரத்திற்கு உரிய நேரத்தில் உரமிடுதல், சிவப்பு கூண் வண்டு கடடுப்படுத்துதல், இனக்கவர்ச்சி பொறிகளை பயன்படுத்துதல், வாடல் நோய் தடுத்தல், ஒரு சதவீதம் போர்டாக் கலவை தயாரித்து பயன்படுத்துதல் உள்ளிட்ட அறிவியல் ஆலோசனைகளை விவசாயிகளுக்கு தெரிவித்தனர்.

பெரியகுளம் ஊராட்சி தலைவர் சுகப்பிரியா இளங்கோ, தென்னை விவசாயிகள் சங்க தலைவர் செல்லத்துரை அப்துல்லா, அப்துல்நாபிக் மற்றும் விவசாயிகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

**கண்மாய்களை ஆழப்படுத்த நடவடிக்கை**

**பரமக்குடி**,:விவசாயிகளின் நலன் கருதி ராமநாதபுரம் மாவட்டத்தில் கண்மாய்களை ஆழப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என அமைச்சர் சுந்தரராஜ் பேசினார்.

பரமக்குடி அருகே நயினார்கோவில் ஒன்றியம் சிறகிகோட்டை, அக்கிரமேசி ஊராட்சிகளில் தமி ழக அரசு சார்பில் இலவச மிக்சி, கிரைண்டர், பேன் வழங்கும் விழா நடந்தது. ஆர்டிஓ குணாளன் தலை மை வகித்தார். கைத்தறி, துணில்துறை அமைச்சர் சுந்தரராஜ் பயனாளிகளுக்கு மிக்சி, கிரைண்டர், பேன் ஆகியவற்றை வழங்கினார். முன்னதாக அக்கிரமேசி கிராமத்தில் புதிய பஸ் சேவையை துவக்கி வைத்தார். பின்னர் அதே கிராமத்தில் புதிதாக கட்டடப்பட்ட குடிநீர் மேல் நிலை நீர் தொட்டியை திறந்து வைத்தார். நயினார்கோவில் ஒன்றியச் செய லாளர் குப்புசாமி, மாவட்ட கவுன்சிலர் ரஜினி, ஒன்றிய கவுன்சிலர் ஜெகதீஸ்வரி பழனி, ஊராட்சி தலைவர் சரஸ்வதி நாகலிங்கம், பிடிஓ லோகன் உட்பட அரசு அதிகாரிகள், கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

விழாவில் அமைச்சர் சுந்தரராஜ் பேசுகையில், "பின்தங்கிய மாவட்டமாக இருந்த ராமநாதபுரம் மாவட்டம் தற்போது தொழில் வளர்ச்சியில் முன்னேறி வருகிறது. வேலைக்கு செல்லும் பெண்களுக்கு வசதியாக இலவச மிக்சி, கிரைண்டர் வழங்கப்படுகிறது. தமிழக அரசு கடந்தாண்டு டெல்டா பகுதி விவசாயிகளுக்கு ரூ.526 கோடி வறட்சி நிவாரண நிதி ஒதுக்கியது. மற்ற பகுதிகளை சேர்ந்த

விவசாயிகளுக்கு ரூ.738 கோடி நிதி ஒதுக்கியது. ராமநாதபுரம் மாவட்டத்திற்கு மட்டும் ரூ.133 கோடி நிதி ஒதுக்கியது. பயிர் இன்சூரன்ஸ் தொகையாக நெல் பயிரிட்டவர்களுக்கு ரூ,5 ஆயிரம், மிளகாய் பயிரிட்டவர்களுக்கு ரூ.4 ஆயிரம் என ரூ.136 கோடி நிவாரணம் வழங்கியது.

தமிழகத்தில் மிக்சி, கிரைண்டர் வழங்குவதில் ராமநாதபுரம் மாவட்டம் முதலிடத்தில் உள்ளது. விவசாயிகளின் நலன் கருதி மாவட்டத்தில் உள்ள கண்மாய்களை ஆழப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் அரசின் திட்டங்கள் நேரடியாக பொதுமக்களை சென்றடைகின்றன" என்று கூறினார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**4 ஆண்டுகளுக்குப் பின் இந்திய திராட்சைக்கு ஐரோப்பாவில் அனுமதி**



**பூனா,**

இந்திய திராட்சையில் பூச்சிக்கொல்லி மருந்துகளின் தாக்கம் இருப்பதாகக் கூறி, நான்கு ஆண்டுகளுக்கு முன் ஐரோப்பாவில் தடை விதிக்கப்பட்டது. தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தில் இந்திய திராட்சைக்கு மீண்டும் அனுமதி

அளிக்கப்பட்டுள்ளது. எனவே 2013–14 பருவத்தில் திராட்சை ஏற்றுமதி கணிசமாக அதிகரிக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

மார்ச் 3–ந் தேதி வரை இங்கிலாந்து உள்பட ஐரோப்பிய நாடுகளுக்கு 14 ஆயிரம் டன் திராட்சை ஏற்றுமதி ஆகியுள்ளது. முந்தைய பருவத்தின் இதே காலத்தில் 8 ஆயிரத்து 500 டன்தான் ஏற்றுமதி ஆகியிருந்தது. பூச்சி மருந்து விவகாரத்தில் 2010–11 பருவத்தில் திராட்சை ஏற்றுமதி 22 ஆயிரம் டன்னாக சரிவடைந்தது. எனினும் பிறகு படிப்படியாக முன்னேற்றம் ஏற்பட்டு 2012–13 பருவத்தில் ஏற்றுமதி 56 ஆயிரம் டன்னை எட்டியது.

மகாராஷ்டிரா மாநிலம் திராட்சை உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் முதலிடத்தில் உள்ளது. அண்மைக் காலத்தில் பெய்த கனமழையால் அங்குள்ள திராட்சைத் தோட்டங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தாலும் நல்ல விலை கிடைத்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியாக உள்ளனர். ஐரோப்பா, ரஷ்யா, வங்காளதேசம் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் இந்திய திராட்சைக்கு தற்போது நல்ல தேவை இருப்பதாக தெரிகிறது.

**திருவள்ளூர் அருகே பசுமாடு 2 கன்றுகளை ஈன்றது**



**திருவள்ளூர்,**

திருவள்ளூரை அடுத்த திருவாலங்காடு பவானி நகரை சேர்ந்தவர் டில்லிபாபு (வயது 45). இவர் தன்னுடைய வீட்டில் 10–க்கும் மேற்பட்ட மாடுகளை வளர்த்து

வருகிறார். இந்த நிலையில் நேற்று முன்தினம் இவரது பசுமாடு ஒன்று அழகான 2 கன்றுகளை ஈன்றது. அந்த 2 கன்றுகளும் நல்ல ஆரோக்கியத்துடன் துள்ளி குதித்து விளையாடி வருகிறது.

இதனை கேள்விப்பட்ட அந்த பகுதியை சேர்ந்தவர்கள் கன்றுக்குட்டிகளை பார்த்து செல்கின்றனர்.

**நாமக்கல் மண்டலத்தில் முட்டை ஏற்றுமதி கடும் சரிவு பண்ணையாளர்கள் கவலை**



**நாமக்கல்,**

நாமக்கல் மண்டலத்தில் இருந்து வெளிநாடுகளுக்கு முட்டை ஏற்றுமதி கடுமையாக சரிவடைந்து உள்ளதால் பண்ணையாளர்கள் கவலை அடைந்து உள்ளனர்.

<u>3¼ கோடி முட்டை உற்பத்தி</u>

நாமக்கல் மண்டலத்தில் 1100–க்கும் மேற்பட்ட கோழிப்பண்ணைகள் உள்ளன. இவற்றில் 4 கோடிக்கும் மேற்பட்ட முட்டையின கோழிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

இதன்மூலம் நாள் ஒன்றுக்கு 3¼ கோடிக்கும் மேற்பட்ட முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இந்த முட்டைகள் கேரளாவுக்கு 70 லட்சம், தமிழக அரசின் சத்துணவு திட்டத்திற்கு 50 லட்சம், வெளிநாடுகளுக்கு 40 லட்சம் என

அனுப்பப்பட்டு வந்தன. மற்ற முட்டைகள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

ஏற்றுமதி குறைந்தது

தற்போதும் இதே நடைமுறை நீடித்தாலும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் தினசரி முட்டை வெகுவாக குறைந்து உள்ளது பண்ணையாளர்களை கவலையில் ஆழ்த்தி உள்ளது. இதற்கு இந்தியாவின் ஏதாவது ஒரு பகுதியில் குறிப்பிட்ட இடைவெளியில் தாக்கும் பறவை காய்ச்சல் நோயே முக்கிய காரணம் என பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர். கடந்த 2007–08–ம் ஆண்டில் மாதம் சராசரியாக 10 கோடி முட்டைகள் வரை ஏற்றுமதி செய்யப்பட்டது. அது 2012–13–ம் ஆண்டில் 3 கோடியே 83 லட்சமாக குறைந்தது.

இதற்கிடையே கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் அதிகபட்சமாக 7 கோடியே 32 லட்சம் முட்டைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. அது அக்டோபர் மாதம் 4 கோடியே 86 லட்சம் ஆகவும், நவம்பர் மாதம் 1 கோடியே 65 லட்சமாகவும், டிசம்பர் மாதம் 3 கோடியே 87 லட்சம் ஆகவும், ஜனவரி மாதம் 2 கோடியே 59 லட்சமாகவும் இருந்தது. இந்த நிலையில் கடந்த மாதம் (பிப்ரவரி) முட்டை ஏற்றுமதி 1 கோடியே 32 லட்சமாக சரிவடைந்து உள்ளது.

5 சதவீதம் இறக்குமதி

முட்டை ஏற்றுமதி சரிவு குறித்து ஏற்றுமதியாளர் ஒருவர் கூறியதாவது:–

நாமக்கல் மண்டலத்தில் இருந்து ஆப்கானிஸ்தான், ஓமன், பக்ரைன் போன்ற நாடுகளுக்கு மட்டுமே தற்போது முட்டை ஏற்றுமதி செய்யப்படுகிறது. இவற்றில் ஓமன், பக்ரைன் நாடுகளில் இருந்து இந்திய முட்டைகளுக்கு வர்த்தக வாய்ப்பு குறைந்து உள்ளது. அரபு நாடுகள் இடையே செய்யப்பட்டு உள்ள வரியில்லா வர்த்தகம் காரணமாக சவூதி அரேபியா, ஈரான், பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து குறைந்த விலைக்கு முட்டைகள் அவர்களுக்கு கிடைக்கின்றன. அதே சமயம் இந்திய முட்டைகளுக்கு 5 சதவீதம் இறக்குமதி வரி விதிக்கப்படுவதால், ஓமன், பக்ரைன் நாடுகளுக்கான முட்டை ஏற்றுமதி சரிவடைந்து உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**நாகை, திருமருகலில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம்**



**திருமருகல்,**

நாகை, திருமருகல் பகுதிகளில் 6–வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது.

**<u>தடுப்பூசி முகாம்</u>**

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் கீழபூதனூர் ஊராட்சி, மேல பூதனூர் கிராமத்தில் 6–வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாம் நடைபெற்றது. முகாமிற்கு ஊராட்சி மன்ற தலைவர் சிவசுப்பிரமணியன் தலைமை தாங்கினார். முகாமில் திருப்பயத்தங்குடி கால்நடை மருத்துவர் ஜீவானந்தம் தலைமையிலான கால்நடை பராமரிப்புத்துறை மருத்துவர் ரவிச்சந்திரன், உதவியாளர்கள் மதியழகன், எழிலரசி, பயிற்சி ஆய்வாளர் சீத்தாராமன் ஆகியோர் கொண்ட மருத்துவ குழுவினர் கால்நடைகளுக்கு தடுப்பூசி பணிகளை மேற்கொண்டனர். முகாமில் மொத்தம் 248 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. இதேபோல் நத்தம், அறிவிழிமங்கலம் ஆகிய கிராமங்களில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது.

**<u>நாகூர்</u>**

மேலும் நாகை நகராட்சி பகுதிக்குட்பட்ட நாகூர் 1–வது வார்டில் தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குனரின் அறிவுரையின்படி, கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாம் நடைபெற்றது.

முகாமிற்கு நகர்மன்ற உறுப்பினர் மகாலட்சுமி சுரேஷ் தலைமை தாங்கினார். முகாமில் கால்நடை மருத்துவர்கள் கொண்ட குழுவினர் கலந்து கொண்டு கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணியை மேற்கொண்டனர். இதில் 218 மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது.

**விவசாய பாசனத்திற்காக திறக்கப்பட்ட வீடூர் அணையின் நீர்மட்டம் கிடு, கிடுவென குறைவு**



**மயிலம்,**

விவசாய பாசனத்திற்காக திறக்கப்பட்டதன் காரணமாக வீடூர் அணையின் நீர்மட்டம் கிடு, கிடுவென குறைந்து வருகிறது.

**<u>வீடூர் அணை</u>**

மயிலம் ஒன்றியத்தில் வீடூர் அணை உள்ளது. இந்த அணையின் மூலம் தமிழ் நாட்டில் 2 ஆயிரத்து 200 ஏக்கரும், புதுச்சேரி மாநிலத் தில் ஆயிரம் ஏக்கரும் பாசன வசதி பெறுகிறது. மழைக் காலங்களில் சங்கராபரணி ஆறு மற்றும் பல்வறு பகுதிகளில் இருந்து வீடூர் அணைக்கு தண்ணீர் வரு கின்றது. இப்படி மழைக் காலங்களில் சேமித்து வைக்கப் படும் தண்ணீர், விவசாய பாசனத்திற்காக திறந்து விடப்படுவது வழக்கம். இந்த ஆண்டு பருவ மழை பொய்த்து போனதன் காரண மாக, வீடூர் அணை நிரம்ப வில்லை. 32 அடி நீர்மட்டம் கொண்ட வீடூர் அணை,

17.5 அடி மட்டுமே நிரம்பியது. இதனால் அணையை நம்பியுள்ள விவசாயிகள், இந்த ஆண்டு நெல் சாகுபடி செய்ய வில்லை.

**<u>நீர்மட்டம் குறைந்தது</u>**

வீடூர் மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் மட்டும், நிலத்தடி நீரை நம்பி நெல் சாகுபடி செய்திருந்தனர். சுட்டெரித்த வெயிலால் நிலத்தடி நீர்மட்டம் மளமள வென குறைந்தது. எனவே பாசனத்திற்காக வீடூர் அணையை திறக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். அதன்படி கடந்த பிப்ரவரி மாதம் 24–ந் தேதி வீடூர் அணை திறக்கப்பட்டது. பிரதான மதகில் இருந்து வினாடிக்கு 6.17 கன அடி தண்ணீர் வெளியேறியது. இந்த தண்ணீர் மூலம் 492 ஏக்கர் விவசாய நிலம் பாசனம் பெறுகிறது. இதன் காரணமாக வீடூர் அணையின் நீர்மட்டம் படிப்படியாக குறைந்துள்ளது. வீடூர் அணை திறக்கும்போது 17.4 அடியாக இருந்த நீர் மட்டம் நேற்று 15.7 அடியாக குறைந்தது. வருகிற 10–ந் தேதி(திங்கட்கிழமை) வரை பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்பட உள்ளது.

**கள்ளக்குறிச்சி சந்தையில் பருத்தி விலை வீழ்ச்சி விவசாயிகள் கவலை**



**கள்ளக்குறிச்சி**,

கள்ளக்குறிச்சி சந்தையில் பருத்தி குவிண்டாலுக்கு ரூ.222 விலை குறைந்ததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**<u>பருத்தி சந்தை</u>**

கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் பருத்தி வாரச்சந்தை புதன்கிழமைதோறும் நடக்கிறது. நேற்று நடைபெற்ற சந்தைக்கு கள்ளக்குறிச்சி, ரிஷிவந்தியம், கூத்தக்குடி மற்றும் கடலூர், பெரம்பலூர் மாவட்டங்களை சேர்ந்த ஆயிரத்து 24 விவசாயிகள் 13 ஆயிரம் மூட்டை பருத்தியை விற்பனைக்கு எடுத்து வந்தனர்.

இவற்றுக்கு சேலம், திருப்பூர், ஈரோடு உள்பட பல்வேறு ஊர்களில் இருந்து வந்திருந்த பஞ்சு ஆலை நிர்வாகிகள், வியாபாரிகள் மறைமுகமாக விலை நிர்ணயம் செய்தனர். ஒரு குவிண்டால் எல்.ஆர்.ஏ. ரக பருத்தி அதிகபட்சமாக ரூ.5,089–க்கும், குறைந்தபட்சமாக ரூ.4,710–க்கும், சுவின் ரக பருத்தி அதிகபட்சமாக ரூ.6,620–க்கும், குறைந்தபட்சமாக ரூ.6,210–க்கும் விற்பனையானது.

<u>விலை வீழ்ச்சி</u>

இந்த விலை கடந்த வாரத்தை விட குறைவாகும். அதாவது சென்ற மாதம் 26–ந் தேதி நடந்த சந்தையில் ஒரு குவிண்டால் எல்.ஆர்.ஏ., ரக பருத்தி அதிகபட்சமாக ரூ.5,311–க்கும், சுவின் ரக பருத்தி அதிகபட்சமாக ரூ.7,169–க்கும் கொள்முதல் ஆனது. இந்த விலையை ஒப்பிடும்போது நேற்றைய சந்தையில் எல்.ஆர்.ஏ. ரகம் குவிண்டாலுக்கு ரூ.222–ம், சுவின் ரகம் ரூ.449–ம் குறைந்திருந்தது.இந்த திடீர் விலை வீழ்ச்சியால் பருத்தி விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**தொடக்க வேளாண் கூட்டுறவு சங்க பேரவைக் கூட்டம்**

**திருச்சி,**

மேட்டுப்பாளையத்தில் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் 38–வது பேரவை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் சங்கத்தலைவர் அங்கமுத்து தலைமை தாங்கி பேசுகையில், இச்சங்கம் 31–03–2013ம் தேதியில் 5082 உறுப்பினர்களுடனும், ரூ.24.65 லட்சம் பங்குத்தொகையுடனும் உள்ளது. 2013–2014 ஆண்டில் ஜனவரி 2014 வரை ரூ.12.79 கோடி வைப்புத்தொகையுடனும், நடைமுறை மூலதானமாக ரூ.15.39 கோடி கொண்டுள்ளது. இச்சங்கம் 7,080 ஏக்கர் நிலங்களுக்கு பயிர் கடன் வழங்கி வருகிறது. அந்த வகையில் 31.01.2014 வரை

பயிர்க்கடனாக ரூ.1.45 கோடியும், மத்திய காலக்கடனாக ரூ.37.08 லட்சமும், மகளிர் சுய உதவிக்குழு கடனாக ரூ.69.49 லட்சமும், நகைக்கடனாக ரூ.9.33 கோடியும், தான்ய கொதுவைக்கடனாக ரூ.15.86 லட்சமும், இதரக்கடன்களாக ரூ.86.50 லட்சமும் என ரூ.13.04 கோடிக்கு கடன் வழங்கியுள்ளது.

மேலும் இச்சங்கம் ரூ.18.15 லட்சம் நிகரலாபம் பெற்று உறுப்பினர்களுக்கு 14 சதவீதம் பங்கு ஈவுத்தொகையாக ரூ.2.61 லட்சம் வழங்குகிறது என்றார்.துணைத்தலைவர் பிரேமா செந்தில்குமார் வரவேற்றார். நிர்வாகக்குழு உறுப்பினர்களான குமார், அழகேசன், முத்தையா, ராதா, தர்மலிங்கம், செல்வராஜ், மணிகண்டன், முத்துலட்சுமி, குமுதம், திருச்சி கூட்டுறவு ஒன்றியத்தின் மேலாண்மை இயக்குனர் செல்வராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முடிவில் சங்க செயலாளர் சீனிவாசன் நன்றி கூறினார்.

**வேளாண் பொருட்களின் விலை விவரம்**

**அரியலூர்,**

அரியலூர் வேளாண்மை விற்பனைக்கூடத்திற்கு வரப்பெற்றுள்ள விளைபொருட்களின் விலை விவரம் வருமாறு:–மக்காச்சோளம் 100 கிலோ ரூ.1,243, உளுந்து (100 கிலோ) ரூ.4,800, மஞ்சசோளம் (100 கிலோ) ரூ.2,929, வெள்ளை சோளம் (100 கிலோ) ரூ.1,300, கம்பு (100 கிலோ) ரூ.1,362, மிளகாய் (10 கிலோ) ரூ.762 , கடலை (50 கிலோ) ரூ.1,550.

இத்தகவலை வேளாண் விற்பனைக்கூட அதிகாரி குமாரசாமி தெரிவித்துள்ளார்.

ஜெயங்கொண்டம் வேளாண்மை விற்பனைக் கூடத்திற்கு வரப்பெற்றுள்ள விளைபொருட்களின் விலை விவரம் வருமாறு:– மணிலா (80 கிலோ) ரூ.3,679 எள்(80 கிலோ) ரூ.8,119.

**கரூர் மாவட்டத்தில் மரவள்ளிக்கிழங்கு விலை வீழ்ச்சி; விவசாயிகள் கவலை**



**நொய்யல்,**

மரவள்ளிக்கிழங்கு விலை வீழ்ச்சியால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ள னர்.

மரவள்ளி கிழங்கு

கரூர் மாவட்டம், வேட்ட மங்கலம் குந்தானிபாளையம், கவுண்டன்புதூர், ஓரப்புப்பாளையம், ஓலப் பாளையம், நல்லிக்கோவில் உள்ளிட்ட பல்வேறு பகுதி களில் ஆயிரக் கணக்கான ஏக்கரில் விவசாயிகள் மரவள்ளிக் கிழங்கு பயிரிட் டுள்ளனர்.

இப்பகுதிகளில் விளையும் மரவள்ளிக்கிழங்குகளை புதன் சந்தை, புதுச்சத்திரம், செல்லப்பம்பட்டி, மின்னாம்பள்ளி, கீரனூர், நாமகிரி பேட்டை, தொ.ஜேடர்பாளையம், ஆத்தூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் செயல்பட்டு வரும் சவ்வரிசி தயார் செய்யும் கிழங்கு மாவு மில்களுக்கு புரோக்கர்கள் மூலம் டன் கணக்கில் வாங்கி அனுப்பி வைக்கின்றனர்.

மரவள்ளிக் கிழங்குகளை (டார்ச்) பாய்ண்ட் அடிப் படையில் வாங்குகின்றனர். கிழங்குகளில் எத்தனை பாய்ண்ட் டார்ச் சத்து இருக் கின்றதோ அதற்கு தகுந்தாற் போல் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

கவலை அடைந்துள்ளனர்

அதே போல் சவ்வரிசி விலை உயரும் போது மரவள்ளிக்கிழங்கு விலை உயர்வும், வீழ்ச்சி அடையும் போது விலை குறைத்தும் விலை நிர்ணயம் செய்யப் படுகிறது. சவ்வரிசி விலையை சேகோசர்வ் மூலம் நிர்ணயம் செய்யப்படுகிறது. கடந்த சில வாரங்களாக மர வள்ளிக் கிழங்கு ஒருடன் ரூ11,500–க்கு விற்பனையானது. இந்த வாரம் ஒருடன் ரூ 8,000க்கு விற்பனை யாகிறது.

டன்னுக்கு ரூ 3,500 வரை விலை குறைந்துள்ளது. விலை வீழ்ச்சியின்காரணமாக மரவள்ளி கிழங்கு பயிரிட்டுள்ள விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**உசிலம்பட்டி பகுதியில் மிளகாய் பயிரிட்ட விவசாயிகள் கவலை**



**உசிலம்பட்டி,**

மிளகாய் வத்தல் விலை கடுமையாக வீழ்ச்சியடைந்ததையொட்டி உசிலம்பட்டி பகுதியில் மிளகாய் பயிரிட்ட விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

<u>மிளகாய் சாகுபடி</u>

கடந்த சில மாதங்களுக்கு முன்பு மிளகாய் வத்தலுக்கு கிராக்கி இருந்தது. இதனால் மார்க்கெட்டில் ஒரு கிலோ மிளகாய் வத்தல் ரூ.100க்கு விற்பனை செய்யப்பட்டது. இதையொட்டி மிளகாய் பயிரிட்டால் நல்ல விலை கிடைக்கும் என்று விவசாயிகள் நம்பினார்கள். இதைத்தொடர்ந்து மதுரை மாவட்டம் சேடபட்டி பகுதியில் உள்ள சின்னக்கட்டளை, சேடபட்டி, ஜம்பலப்புரம், அத்திபட்டி, தொட்டனம்பட்டி,

எஸ்.சென்னம்பட்டி, காளப்பன்பட்டி உள்ளிட்ட பல கிராமங்களில் பல ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் மிளகாய் செடிகள் சாகுபடி செய்யப்பட்டன.

விவசாயிகள் கவலை

தற்போது வளர்ந்து அறுவடைக்கு மிளகாய் செடிகள் தயாராக உள்ளன. ஆனால் மிளகாய் வத்தலின் விலை கடும் சரிவை சந்தித்துள்ளது. ஒரு கிலோ மிளகாய் வத்தலின் விலை ரூ.60 ஆக இருந்து வருகிறது. பச்சை மிளகாய் கிலோ ரூ.10க்கு விற்கிறது. இதனால் நல்ல லாபம் கிடைக்கும் என்று எதிர்பார்த்து மிளகாய் பயிரிட்ட விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். ஒரு ஏக்கரில் மிளகாய் பயிரிட்டால் 10 குவிண்டால் அளவுக்கு தான் வத்தல் கிடைக்கும். விதை, நடவு, களை எடுத்தல், உரம், மிளகாய் பறித்தல் என இதற்கான செலவுகள் ரூ.50 ஆயிரம் வரை ஆகிறது. மிளகாய் வத்தலுக்கு நல்ல விலை கிடைத்து லாபம் கிடைக்கும் என்று நம்பி இருந்த நிலையில் விலை வீழ்ச்சி காரணமாக விவசாயிகளுக்கு கடும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

அரசு கொள்முதல் மையம்

இதுகுறித்து சின்னக்கட்டளையைச் சேர்ந்த விவசாயி முத்தையா (41) கூறியதாவது:–

கடந்த 3 மாதங்களுக்கு முன்பு மிளகாய் விலை நல்ல விலைக்கு போனது. இதை நம்பி மிளகாய் சாகுபடி செய்தோம். ஆனால் தற்போது மிளகாய் வத்தலுக்கு போதிய விலை கிடைக்கவில்லை. கஷ்டப்பட்டு விவசாயம் செய்து அறுவடைக்கு தயாரான மிளகாய் வத்தலுக்கு வியாபாரிகள் தான் விலை நிர்ணயம் செய்கிறார்கள். கடுமையான விலை வீழ்ச்சி காரணமாக விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இறவை பாசனத்தை பயன்படுத்தி தண்ணீர் பாய்ச்சி மிளகாய் சாகுபடி செய்தோம். ஆனால் செலவழித்த அசல் தொகையாவது கிடைக்குமா? என்பது கூட சந்தேகமாக உள்ளது. இந்த நிலையை தவிர்க்க அரசே நெல் கொள்முதல் செய்வது போல் காய்கறிகளையும் அரசே கொள்முதல் செய்ய வேண்டும். இதன் மூலம் விவசாயிகளுக்கு ஓரளவாவது பயன் கிடைக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

**கால்நடை ஆஸ்பத்திரிக்கு புதிய கட்டிடம் முத்துசெல்வி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்**



சங்கரன்கோவில் புதுமனை தெருவில் கால்நடை ஆஸ்பத்திரி இயங்கி வருகிறது. இந்த கட்டிடம் பழமையாக இருந்ததால் ரூ.15 லட்சம் செலவில் புதிய கட்டிடம் கட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டு அனைத்து வசதிகளுடன் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. புதிய ஆஸ்பத்திரி கட்டிடத்தை முத்து செல்வி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்.

நகரசபை தலைவர் கண்ணன், கால்நடை துறை மண்டல இணை இயக்குனர் கெங்காராஜ், நகர செயலாளர் ஆறுமுகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கால்நடை டாக்டர் பாலமுருகன் வரவேற்றார். கால்நடைகளுக்கு குடற்புழு நீக்க மருந்துகள் அளிக்கப்பட்டன.

**சுத்தமல்லியில் பாண்டியன் வங்கி புதிய கிaளை கலெக்டர் கருணாகரன் திறந்து வைத்தார்**

**நெல்லை,**

சுத்தமல்லியில் பாண்டியன் வங்கியின் புதிய கிளையை கலெக்டர் மு.கருணாகரன் திறந்து வைத்தார்.

<u>புதிய கிளை</u>

நெல்லை அருகே உள்ள சுத்தமல்லியில் பாண்டியன் கிராம வங்கி புதிய கிளை தொடங்கப்பட்டு உள்ளது. இந்த கிளை அலுவலகத்தை கலெக்டர் மு.கருணாகரன் திறந்து வைத்தார். தொடர்ந்து ரூ.1 கோடியே 35 லட்சத்தில் 215 பேருக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் கடன் உதவிகளை கலெக்டர் மு.கருணாகரன் வழங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

பாண்டியன் கிராம வங்கி மத்திய, மாநில அரசு மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி இணைந்து நடத்தும் அரசுடமை வங்கி. தமிழ்நாட்டில் 16 மாவட்டங்களில் 236 கிளைகளுடன் செயல்பட்டு வருகிறது. இந்திய அரசின் ''அனைவருக்கும் வங்கி சேவை, வீடுதோறும் வங்கி கணக்கு'' என்ற தொலைநோக்கு திட்டத்தின் கீழ் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பாண்டியன் கிராம வங்கியின் 237–வது கிளை சுத்தமல்லியில் புதிதாக திறக்கப்பட்டுள்ளது. விவசாயம், விவசாயம் சார்ந்த தொழில்கள், சிறு தொழில்கள், குறுந்தொழில்கள் செய்யும் நபர்களை ஊக்குவிக்கும் விதமாக முன்னுரிமை அளித்து கடனுதவி வழங்கி அவர்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்திட உறுதுணை செய்யும் வகையில் செயல்பட்டு வருகிறது.

ரூ.135 கோடி லாபம்

வங்கியின் வைப்புத் தொகை 31.12.2013 அன்று ரூ.2 ஆயிரத்து 974 கோடியாகவும், வங்கியின் கடன் நிலுவைத் தொகை ரூ.3 ஆயிரத்து 782 கோடியாகவும், 2012–2013ம் ஆண்டிற்கான மொத்த லாபம் ரூ.135 கோடியாகவும், தொடர்ந்து லாப நிலையில் செயல்பட்டு வருகிறது. மேலும், இந்திய அரசு நிர்ணயித்த 5 இலக்குகளை அடைந்து சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தேசிய வங்கிகளுக்கு இணையாக வாடிக்கையாளர்களுக்கு அனைத்து சேவைகளையும் செய்து வருகிறது. வெளிநாடுகளிலிருந்து நேரிடையாக எளிமையான முறையில் பணம் பெற்றுக் கொள்ளும் வசதியும் உள்ளது. அனைத்து தரப்பு மக்களும் இந்த வங்கியின் சேவையை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு கலெக்டர் மு.கருணாகரன் கூறினார்.

நிகழ்ச்சியில், மண்டல மேலாளர் ச.ஞானபிரகாசம், பொது மேலாளர்கள் கு.ராமசுப்பு, அழ.ராமநாதன், கிளை மேலாளர் ப.சிவகாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**குமரி மாவட்டத்தில் ரூ.10¾ கோடி செலவில் கால்வாய் சீரமைப்பு பணிகள் பொதுப்பணித்துறை அதிகாரி தகவல்**

**நாகர்கோவில்,**

குமரி மாவட்டத்தில் ரூ.10¾ கோடி செலவில் கால்வாய் சீரமைப்பு பணிகள் நடந்து வருவதாக பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சுப்பிரமணியன் தெரிவித்தார்.

<u>கடைவரம்பு நிலத்துக்கு பாசனம்</u>

குமரி மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக வெயில் அடித்து வருகிறது. அணைகளில் நீர்மட்டம் குறைகிறது. இதற்கிடையே கும்பப்பூ நெல் அறுவடை பல இடங்களில் முடிந்துள்ளன. இதனால் பெருஞ்சாணி அணை கடந்த 2 தினங்களுக்கு மூடப்பட்டது. தோவாளை கால்வாய், என்.பி. கால்வாய் மூலம் கடைவரம்பு நிலங்களுக்கு மட்டும் பேச்சிப்பாறை அணை தண்ணீர் செல்கிறது.

மேலும் மண்டைக்காடு பகவதியம்மன் கோவில் திருவிழாவுக்காக பேச்சிப்பாறை தண்ணீர் அனந்தனாறு கால்வாயில் சிறிதளவு விடப்பட்டு உள்ளது. இதனால் அடுத்த பாசனத்துக்கு முன்பு, கால்வாய்களை சீரமைக்க முடிவு செய்து அதிகாரிகள் பணிகளை தொடங்கியுள்ளனர். இதுபற்றி குமரி மாவட்ட பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் (நீர்வள ஆதார அமைப்பு) சுப்பிரமணியன் கூறியதாவது:–

<u>ரூ.10¾ கோடி</u>

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கால்வாய்கள் கடந்த 2011–ம் ஆண்டில் இருந்தே சீரமைக்கப்பட்டு வருகின்றன. மொத்தம் 50 பணிகள் இதற்காக தேர்வு செய்யப்பட்டதில் 15 பணிகள் முடிந்துள்ளன. மீதம் உள்ள பணிகள் நடந்து வருகிறது. தற்போது நடைபெற்று வரும் பணிகள் ரூ.10 கோடியே 70 லட்சம் செலவில் நடக்கிறது. இதுபோக அடுத்த ஆண்டுக்கான பராமரிப்பு பணிகளும் சில கால்வாய்களில் தொடங்கியுள்ளது. ஷட்டர் கசிவு, ஓட்டைகள் போன்றவற்றை ஊழியர்கள் பார்த்து வருகிறார்கள். இவற்றை அடையாளம் கண்டு சீரமைப்பு பணிகள் தொடங்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.